ஆட்சிமன்றத்தில் அண்ணுமறைவுக்கு துக்கம்; தீர்மானம் கைவிடப்பட்டது

Registered as a News paper in Ceylo

விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்: 12
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் மாசி 11 ஞாயிறு: 4 சனிக்கிழமை [22-2-69]

ஜே. ஆர். ஆதரவு; ஆர். ஜி. எதிர்ப்பு

அறிஞர் அண்ணுவின் மறைவுக்கு துக்கம் தெரிவிக்கவேண்டும் கைவிடப்பட்டது.

கொழும்பு, சனி ஆட்சி மன்றத்தில் என்ற தீர்மானம்

ஆட்சி மன்றத்தில் தமது அறையில் நேற்று ஆட்சி மன்றக் கட்சித் தலைவர்களுடன் நடாத்திய ஆலோசனையின் பின்னர் சபாநாயகர் அமரர் அண்ணு அனுதாபத் தீர்மானத்தைக் கைவிட்டுவிடுவதென அறிவித்தார்.

ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனு, தமிழரசுக்கட்சித் தலைவர்கள் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், டாக்டர் ஈ.எம் வி.நாகநாதன், திரு. அ. அமிர்தலிங்கம், தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், உப-சபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் காணிநீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா, திரு.ஆர்.ஜி.சேனநாயக்கா, கம்யூனிஸ்ட்கட்சி (பீகிங் சார்பு)யைச் சேர்ந்த திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா ஆகியோர் சபாநாயகர் அறையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்தனர்.

அண்ணு மறைவு குறித்து ஆட்சிமன்றத்தில் துக்கம் தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றவேண்டுமெனச் சபாநாயகரை வற்புறுத்தி தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.ஜி.பொன்னம்பலம் கடிதம் எழுதியதைத் தொடர்ந்தே இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

ஆட்சி மன்றத்தில் அண்ணுவுக்குத் துக்கம் தெரிவிக்கும் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றவேண்டுமென ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனு பிரேரித்தார். இதனை காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா ஆமோதித்தார். தமிழரசுக் கட்சித் தலைவர்கள், காங்கிரஸ் தலைவர்கள் இதனை வரவேற்றனர்.

திரு. ஆர். ஜி. சேனநாயக்காவும், திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவும் ஆட்சி மன்றத்தில் துக்கம் தெரிவித்கும் தீர்மானம் நிறைவேற்றவேண்டிய அவசியமில்லையென்றும், அப்படித் துக்கம் தெரிவிக்கும் தீர்மானம் கொண்டுவரப்பட்டால் அத்தீர்மானத்தை எதிர்ப்பதுடன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நடவடிக்கைகள் பற்றிப் பகிரங்கமாக எதிர்த்துப் பேசுவோமென்றும் தெரிவித்தனர்.

பிற்போக்குச் சக்திகளுக்குத்தான் அண்ணு மறைவு பேரிழப்பென்றும், அப்படியான ஒடுவடுக்குத் துக்கம் தெரிவிக்கும் தீர்மானம் ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றுவது பொடுத்தமானதாக இடுக்கமாட்டதென்றும் திரு எஸ். டி. பண்டாரநாயக்கா எடுத்துக்கூறினர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர்கள் எவரும் ஆலோசனைக் கூட்டத்துக்கு வரவில்லை. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கையெழுத்திட்டு ஒரு குறிப்பை அனுப்பியிருந்தனர். ஆட்சி மன்றத்தில் அண்ணுவுக்கு துக்கம் தெரிவிக்கும் தீர்மானம் கொண்டுவந்தால் தாம் வெளிநடப்புச் செய்வேகமென்று குறிப்பில் தெரிவித்திருந்தனர்.

சபாநாயகர் ஆலோசனையின் முடிவில், அண்ணுவுக்கு துக்கம் தெரிவிக்கும தீர்மானத்திற்கு எதிர்ப்பு இடுப்பதால் இதனைக் கைவிட்டுவிடுவதாகத் தெரிவித்தார்.

அடுத்த ஜனுதிபதி தேர்தலில் அயூப்கான் போட்டியிடார்

பாகிஸ்தான் அதிபரின் திடீர் அறிவிப்பு

ராவல்பிண்டி, பெப். 21

பாகிஸ்தான் ஜனுதிபதி ஜெனரல்அயூப்கான், அடுத்த ஜனுதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதில்லையென அறிவித்துள்ளார்

பாகிஸ்தான் வானொலியில் இன்று மாலை தனது முடிவைத்திடீரென அறிவித்தார். முன்னர் ஏற்பாடு செய்யப்படாத வானொலி நிகழ்ச்சியொன்றில் ஜெனரல் அயூப்கான் உரை நிகழ்த்துகையில், இந்த முடிவைத் தெரிவித்தார்.

தன்னுடைய இந்த முடிவு உறுதியானதென்றும் பாகிஸ்தான் ஜனுதிபதி தமது வானொலி உரையில் குறிப்பிட்டார்.

மாணவர்களுடைய கோரிக்கைகள் நியாயமானதென்றும் அவர்களுடைய கோரிக்கைகளுடைய நிலையில் ஏற்படவேண்டிய அமைதியையும், சகலரது ஒத்துழைப்பையும் சுடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இன்றுமாலை அயூப் வானொலியில், அடுத்த ஜனுதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டானெத் தெரிவித்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"மாணவர்களது கோரிக்கைகளிலுள்ள நியாயத்தை உணர்ந்திருக்கிறேன். அவர்களுடைய கோரிக்கைகள் நிச்சயமாக விரைவில் நிறைவேற்றப்படும். நாட்டின் நிலையில் ஏற்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரிகளில் பொலிஸாரும் மாணவருக்கு கற்பிப்பர்

யாழ்ப்பாணம், சனி

கல்லூரிகளில் ஆசிரியர்கள் பாடம் கற்பிப்பது போல, பொலிசாரும் கல்லூரிகளுக்குச் சென்று புதிய பாடங்களை மாணவர்களுக்குக கற்பிக்க முன்வந்துள்ளார்கள். அடுத்த மாதம் 15ம் திகதியிலிருந்து பொலிசாரின் புதிய வகுப்புகள் வடபகுதிக் கல்லூரிகளில் ஆரம்பமாகும்.

நேற்று முன்னம் வடபகுதி பொலிஸ் அதிகாரிகள் இங்குள்ள கல்லூரி அதிபர்களுடன் நடாத்திய மகாநாடொன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

நாட்டில் அதிகரித்து வரும் குற்றச்செயல்கள் வீதிவிபத்துக்கள் ஆகியவற்றைத் தடுக்கும் வழிகள் பற்றிய விளக்கப்படங்களுடன் இந்த வகுப்புகளைப் பொலிசார் நடாத்துவார்கள். இதற்கென ஒவ்வொரு துறையிலும்விசேஷ நிபுணத்துவம் பெற்ற பொலிஸ் அதிகாரிகள் விரிவுரையாளர்களாகத் தெரிந்தெடுக்கப்படுவார்.

பொலிசாரின் இந்த வகுப்புகள் முதலில் யாழ்.நகரிலுள்ள கல்லூரிகளில் நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு' அசீஸ் ஒவ்வொரு துறையிலும் பயிற்சி பெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் உட்பட பல கல்லூரிகளின் அதிபர்களும் கலந்து கொண்டனர், (கா.நி)

யு. என். பி—தமிழரசு தொடர்பு —பிரதமர் விளக்குவார்

கொழும்பு, வெள்ளி

தமிழரசுக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையான தொடர்பு குறித்து பிரதமர் டட்லி சேனநாயக்கா குளியாப்பிட்டியாவில் நடைபெறும் யு. என். பி. மாகா நாட்டில் தெளிவாக விளக்குவார்.

அடுத்த பொதுத் தேர்தல் நடைபெறும் திகதியையும் பிரதமர் இம் மகாநாட்டில் அறிவிப்பாரென எதிர்பார்க்கப் படுகிறது. 1670-ம் ஆண்டு மேமாதம் பெதுத் தோதல் நடக்கலாமென தமது அறிவிப்பில் வெளியிடுவாரென யு. என். பி. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழரசுக் கட்சியும் யு. என். பியும் எந்த அடிப்

(4-ம் பக்கம் பார்க்க)

நாட்டில் அதிகரித்து வரும் குற்றச்செயல்கள் வீதிவிபத்துக்கள் ஆகியவற்றைத் தடுக்கும் வழிகள் பற்றிய விளக்கப்படங்களு துறையிலும் பயிற்சி பெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் உட்பட பல கல்லூரிகளின் அதிபர்களும் கலந்து கொண்டனர், (கா.நி)

235-வது சுவீப்

உடுப்பிட்டி, பருத்தித்துறை எம்.பி.க்கள் கலந்துகொள்வர்

உடுப்பிட்டி, வெள்ளி

தேசிய லொத்தர் சபையின் 235-வது சீட்டிழுப்பு வரும் 27-ந் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு உடுப்பிட்டித் தொகுதியில் நடைபெறவிருக்கின்றது.

இச்சீட்டிழுப்பு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடாத்தப்படும்.

உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி. யுமானதிரு. மு. சிவசிதம்பரம் முதல் பரிசுக்கான டிக்கெட்டை இழுப்பார்.

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் இரண்டாவது பரிசு பெறும் டிக்கெட்டை எடுப்பார்.

பருத்தித்துறை நகர சபைத்தலைவர் திரு. என். நடராசா மூன்றாவது பரிசைப்பெறும் டிக்கெட்டை எடுப்பார்.

இதர ஆறுதல் பரிசுகளுக்குரிய டிக்கெட்டுகளைப் பொதுமக்கள் தெரிந்தெடுப்பார்கள்.

நாகாலந்தில்

புதுடில்லி, பெப். 21

நாகாலந்தில் நாளைய தினம் புதிய மந்திரிசபை பதவி ஏற்றுக்கொள்ளும். இந்த மந்திரிசபையில் 16 மந்திரிகள் இருப்பார்கள். கலைக்கப்பட்ட மந்திரிசபையில் 11 மந்திரிகள் இருந்தனர்.

தன்னுடைய இந்த முடிவு உறுதியானதென்றும் பாகிஸ்தான் ஜனாதிபதி தமது வானொலி உரையில் குறிப்பிட்டார்.

மாணவர்களுடைய கோரிக்கைகள் நியாயமானதென்றும் அவர்களுடைய கோரிக்கைகளை விரைவில் நிறைவேற்றுவேனென்றும் ஆயூப் குறிப்பிட்டார்

கடந்த பத்தாண்டு காலமாக பாகிஸ்தான் ஜனாதிபதியாகயிருந்து வரும் ஜெனரல் அயூப்கானுக்கு எதிராக சமீபகாலமாக நாட்டின் நாலா பக்கத்தாலும் பலத்த எதிர்ப்பும், ஆர்ப்பாட்டங்களும் நடந்து கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அயூப்பைப் பதவியிலிருந்து இறக்குமாறு மாணவர்களும் பொதுமக்களும்நாடாத்திய ஆர்ப்பாட்டம் கடந்த சில நாட்களாக உச்சக் கட்டத்தை அடைந்தது.

அயூப் சமீபத்தில் இந்த எதிர்ப்புக் கிளர்ச்சிகளைத் தொடர்ந்து, பாக். அவசர கால நிலைமையைத் தளர்த்தியதுடன், காவலிலிருந்த எதிர்க் கட்சித் தலைவர்களையும் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

சமீபத்தில் கூட்டமொன்றில் அயூப் பேசிக் கொண்டிருந்த போது, அயூப்பைக் கொலை செய்யும் நோக்கத்துடன் அவரை நோக்கி

உணர்ந்திருக்கிறேன். மாணவர்களுடைய கோரிக்கைகள் நிச்சயமாக விரைவில் நிறைவேற்றப்படும். நாட்டின் இன்றைய நிலையில் ஏற்படவேண்டிய அமைதியையும், சகலரது ஒத்துழைப்பையும் அவசியமெனக் கருதுவதால் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தும் எனது விடுப்பத்தை கைவிடமாட்டேன்'' என்றார்.

தமிழ்நாடு சட்டசபையில் அண்ணாவுக்கு அஞ்சலி

சென்னை, பெப். 21

காலஞ்சென்ற தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரைக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் தமிழ்நாடுஇரு சட்டசபைகளிலும் இன்று நிறைவேற்றப்பட்டது.

அண்ணா கடுமையாக சுகவீனமுற்றபொழுது திகதி நிர்ணயிக்காமல் ஒத்திப்போடப்பட்ட தமிழ்நீழ் சட்டசபை இன்று காலை 11 மணிக்கு கூடியது. அண்ணாவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானத்தை முதலமைச்சர் திரு. கருணாநிதி சபையில் சமர்ப்பித்துப் பேசினார்.

அரசியல்வரலாற்றிலேயே புதிய வழியொன்றைக் கடைப்பிடித்து ஜனநாயகத்தைப்பேணி பாதுகாத்தவர் அண்ணாவென்று திரு. கருணாநிதி குறிப்பிட்டார். தீர்மானம் நிறைவேறிய பின் சபை நடவடிக்கைகள் ஒத்திப்போடப்பட்டன.

கச்சதீவு பிரச்னை

இன்று நடைபெறும் முக்கிய மகாநாடு

நல்லூர், சனி

கச்சதீவுத் திருநாள் காலம் சமீபித்துவருவதைத் தொடர்ந்து மீண்டும் கச்சதீவுப் பிரச்னை தலையெடுத்துள்ளது. கச்சதீவுக்கு இம்முறை இலங்கையிலிருந்து யாத்திரிகர்கள் செல்வதற்கு அனுமதியளிப்பதா? கச்சதீவுத் திருநாள் காலத்தைக் காரணமாகக்கொண்டு சட்டவிரோதக் குடியேற்றம், கள்ளக்கடத்தல் ஆகியவைகள் நடைபெறாமல் எப்படித் தடுப்பது? இவைபற்றி ஆராய்வதற்காகவும் கச்சதீவுத் திருநாள் சம்பந்தமாக என்ன நடவடிக்கைகளை மேற்கொள்வதெனத் தீர்மானிப்பதற்காகவும் இன்று கொழும்பில் உயர் அதிகாரிகளின் முக்கிய மகாநாடொன்று நடைபெறவிருக்கிறது. பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் உயர்தர அதிகாரிகள் கலந்துகொள்ளும் இம்மகாநாட்டில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸும் கலந்துகொள்வார்.

1000 பேர் 'பார்மிட்' மனு

கச்சதீவுக்கு இம்முறை யாத்திரிகர் செல்வதானால் 'பர்மிட்' கோரி யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு மனுச்செய்துள்ளனர். இவர்களுக்கு 'பர்மிட்' வழங்குவதா, யார் யாருக்குப் 'பர்மிட்' வழங்கப்படவேண்டும், இதற்குரியதகுதிகள், நிபந்தனைகள் என்ன? இதுபோன்ற கேள்விகளுக்கு இன்று கொழும்பில் நடைபெறும் மகாநாட்டில் பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி, முப்படைத் தளபதிகள், பொலிஸ் அதிபர் மற்றும் உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொள்ளவிருக்கும் இம்மகாநாட்டில் கச்சதீவுத் திருநாள் சம்பந்தமாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்படுவதுடன் இந்திய அரசாங்கத்துடனும் பாதுகாப்பு அமைச்சு தொடர்புகொள்ளுமெனத்தெரிகிறது.

இதேசமயம் கச்சதீவில் திருநாள் இல்லையென்றும் அங்குயாரையும் செல்லும்படி தாங்கள் ஆலோசனை கூறவில்லையென்றும் யாழ்ப்பாணம் கத்தோலிக்க திருச்சபைத்தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது.

செலவுப் பணம்

சுழிபுரம், வெள்ளி

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ விழாவில் கலந்துகொண்ட சனசமூகநிலையங்களுக்குபோக்குவரத்துச் செலவுக்கான பணம் வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

காஷ்மீரில் சதிக்கும்பல் 10 பேர் கைது

ஸ்ரீநகர், பெப். 21

காஷ்மீரில் நாசவேலைகளில் ஈடுபடவிருந்த ஒரு சதிக்கும்பலை காஷ்மீர் மாநில அரசு முறியடித்திருக்கிறது.

இத்தகவலை காஷ்மீர் முதலமைச்சர் திரு. சாதிக் பத்திரிகை நிருபர்களிடம்வெளியிட்டார். காஷ்மீரிலுள்ள இரு முஸ்லிம் மகுதிகளுக்குத் தீவைக்க இச்சதிக்கும்பல் ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்ததாம்.

குண்டுகள், வெடிமருந்துகள் றைபிள்கள் போன்ற ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர். இதுசம்பந்தமாக 10 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பாகிஸ்தானின் நேரடித் தூண்டுதலின் மீது இந்தச் சதிவேலையில் ஈடுபடவிருந்ததாக முதலமைச்சர் சாதிக் கூறியுள்ளார்.

'புற்றுநோயால் வாடுபவர் துயர்தீர்க்கமுன்வாருங்கள்''

தடுப்பு இயக்க தலைவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், சனி

சென்ற வருடத்தில் 340 பேருக்கு மேற்பட்டோர் யாழ்ப்பாணம் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது. இந்த நிலையம் முழு அளவிலான சிகிச்சை அளிக்கக்கூடிய நிலையிலில்லை. திருப்திகரமான சிகிச்சையளிக்கக் கூடிய நிலையமொன்று யாழ்ப்பாணத்தில் அமைவது அவசியம். இதுவரை அரசாங்கம் இதுபற்றி சிந்திக்கவில்லை.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட புற்றுநோய் தடுப்புச்சங்கத் தலைவர் டாக்டர் கே. கனகரத்தினம் இதுசம்பந்தமாக வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

டாக்டர் கனகரத்தினம் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

புற்றுநோயால் பீடிக்கப்பட்டிருக்கும் சிலர் இதற்கு வேண்டிய சிகிச்சைபெற்றுக் கொள்ளாது இரகசியமாக இருந்து இறந்துவிடுகின்றனர். பூரணசிகிச்சையளிக்கக்கூடிய வசதி மகாரகமவிலுள்ள புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் மட்டுமே இருப்பதால் இங்குசெல்ல விரும்பாத அல்லது வசதியற்றவர்கள் இரகசியமாகவே இந்நோயின் தாக்குதலுக்குள்ளாகி வீட்டிலேயே மரணமடைகின்றனர்.

எனினும் மற்ற எந்தப்பகுதியையும்விட வடபகுதியிலிருந்தே பலர் மகாரகமவுக்கு சிகிக்சை பெறுவதற்காகச் செல்கின்றனர்.

புற்றுநோயால் பீடிக்கப்படுபவர்கள் சிகிச்சையின் பின்பும்கூட சீவியத்துக்காக உழைக்கமுடியாதநிலை ஏற்பட்டுவிடுகிறது. உடல்மனவலியால் அவர்கள் வேதனைக்குள்ளாவதோடு பணக் கஷ்டங்களுக்கும் உள்ளாகிறார்கள். இவ்விதம் அவதியுறுபவர்களுக்கு உடையோ உணவோ மற்றும் எந்த விதத்திலாவது உதவி செய்ய எள்ளமுள்ளவர்கள் முன்வரவேண்டுமெனக்கேட்டுக்கொள்கிறோம். இது பெரியதொரு பணியாகவே கணிக்கப்படும்.

தமிழரசு பிரதமர் சந்திப்பு

கொழும்பு, வெள்ளி

ஆட்சி மன்றத்தில் இன்றிரவு தொடர்ந்து விவாதம் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், குறிப்பிட்டபடி பிரதமர்-தமிழரசு சந்திப்பு நடைபெற மாட்டாதெனத் தெரிய வருகிறது. ஆயினும் ஆட்சி மன்றத்தில் பிரதமரைச் சந்தித்து தலைவர்கள் பேசக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தன. தமிழரசுக் கட்சி தொடர்ந்து அரசாங்கத்தை ஆதரிப்பதா என்பது குறித்து முடிவு செய்வதற்கான முக்கிய சந்திப்பு இன்று நடக்கவிருந்தது. இன்று இரவு பிரதமர்-தமிழரசு தலைவர்கள் சந்தித்திருக்காவிட்டால் குளியாப்பிட்டியாய. என். பி. மகாநாடு நடந்த பிறகே சந்திப்பு நடக்கலாமெனத் தெரியவருகிறது.

புனிதவதி கொலை வழக்கு

அடுத்த மாதம் விசாரணை

யாழ்ப்பாணம், சனி

புனிதவதி கொலை வழக்கு வடபகுதி அசைஸ் கோட்டில் நீதியரசர் பண்டிதகுணவர்த்தனா முன்னிலையில் அடுத்தமாதம் 5-ம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இவ்வழக்கு கடந்தவடுடம் நடைபெற்ற வடபகுதி அசைஸ் விசாரணையின் போது, நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு எதிரிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

எதிரி அப்பீல் செய்ததைத் தொடர்ந்து, மறு விசாரணை செய்யும்படி அப்பீல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

யாழ்.

மாநகரசபையில்

வரி மதிப்பீடு உயர்வுக்கு பலத்த கண்டனம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண நகரின் வரி மதிப்பீட்டுயர்வுக்கு யாழ். மாநகரசபை தனது பலத்த ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொண்டது. இதனால் பல அங்கத்தவர்களினதும் ஆட்சேபனையையும், கண்டனங்களையும் தொடர்ந்து மிக முக்கியமான இந்தப் பிரச்சினை நீண்ட நேரம் சபையில் விவாதிக்கப்பட்ட பின்னர் இதற்கான முடிவை சபையின் மற்றக் கூட்டத்தில் எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

நேற்று மாலை நடைபெற்ற யாழ். மாநகரசபையின் முதற் கூட்டத்திலேயே இந்தப் பிரச்சினை தலைதூக்கியது. தற்போது பன்னிரண்டரை வீதமாக இருக்கும் சோலைவரியை முப்பது வீதமாக அதிகரித்து அறவிடுவதற்கான முன்னேற்பாடாக இந்தச் சிபார்சு இருப்பதாகத் துணை மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம், திரு. அ. விசுவநாதன், திரு. கே. வி. தெய்வேந்திரம், திரு. அல்பிரட் துரையப்பா, திரு. ஏ. ஜி. ராஜசூரியர், திருமதி அந்தோனியா சுவாமிநாதர் உட்படப் பல அங்கத்தவர்களும் கண்டித்துப் பேசினார்கள்.

இம்மாதம் 19ந் திகதி நடைபெற்ற சபையின் நிதிக் குழுவின் கூட்டத்தில் பின்வரும் சிபார்சு பரிசீலனை செய்யப்பட்டபோது இதுபற்றி நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

'மாநகர எல்லைக்குள்ளிருக்கும் வீடு வளவுகளை மீளவரி மதிப்பீட்டளவை சம்பந்தமாகப் பிரதம மதிப்பீட்டாளருக்குக் கொடுக்கவேண்டிய மிகுதி வரி மதிப்புப் பதிவேடுகளைப் பெறுவதென்றும் தெரிவிசெய்யப்பட்டது.'

இதற்குப் பலத்த ஆட்சேபனை நேற்று சபையில் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்

விற்பனைக்கு

கடை:

கஸ்தூரியார் வீதி, 73/1, இலக்கமுள்ள கடை விற்பனைக்குண்டு. வி. கந்தையா, 74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 695

காணி:

நாலு பரப்பு ஆறு குளிகளைக்கொண்ட கட்டிடக் காணித்துண்டு படுத்தித் துறை ரவுனில் விற்பனைக்குண்டு. தொடார்புகொள்க. திருமதி சின்னையா. உபதபாற்கந்தோர், துன்னாலை. 693

தேவை

அனுபவமுள்ள கணக்கப்பிள்ளை, பாண், பிஸ்கற் தயாரிப்பாளர்கள் உடனே தேவை. வேல்ஸ் பேக்கரி, முரசுமோட்டை, பரந்தன். 688

யாழ்ப்பாணத்தில் கார்கள் வாங்கவும், விற்கவும், மாற்றுவதற்கும், ட்றேட் அன்ட் ட்ரான்ஸ்போர்ட் கம்பனி லிமிட்டட் ஒவ்வொரு போயா முன்தினத்திலும், ஒழுங்குசெய்திருக்கின்றது. பெப்ரவரி 23ல் ஆரம்பம். தொலைபேசி எண் 375. 692

பிரபல அச்சகத்திற்கு மனேச்சர் தேவை. ரொக்கப்பிணை ரூபா 2000/- செலுத்தக்கூடியவர்கள் மட்டும் 28-ம் திகதிக்கு முன் விண்ணப்பியுங்கள். பொறுப்பாளர், 68, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 694

இன்றைய பலன்

சனிக்கிழமை
(22-2-69)
மாசி மாதம், 11 உ

திதி- ஷஷ்டி இரவு 9-54 மேல் சப்தமி.

நட்சத்திரம்- பரணி பின்இரவு 5-51 மேல் கார்த்திகை.

ராகுகாலம் 9-31 - 11-01.

சுபநேரம்- 3-31 — 5-01.

இன்று பிறந்தவர்களுக்கு— கற்றதால் பயன் கைமேல் கிடைக்கும். பொறியியலாளர்

நெரியுண்டு மரணம்

யாழ்ப்பாணம், சனி ட்ராக்டர் மோதிய ஒருவர் ஸ்தலத்தில் நெரியுண்டு மரணமானார்.

இந்தப் பரிதாப சம்பவம் பளை பொலிஸ் பகுதியில் நடைபெற்றது. மரணமான சுப்பன் [50 வயது] என்பவரின் சடலம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு மரணவிசாரணை நடத்தப்பட்டது.

பளை பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். [கா.நி]

இளைஞன் பரிதாபமாக மரணம்

புலோலி, வெள்ளி கம்பர் மலையைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை வேலுப்பிள்ளை (வயது 25) புகையிலைக்கு கிருமிநாசினி தெளிக்கையில் அறிவு மயங்கி மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளித்தும் பயனடையாது மரணமானார்.

இவரின் மரணத்தையிட்டுத் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் ஆஸ்பத்திரியில் விசாரணை நடத்தினார். விசாரணை முடிவில் தற்செயலான மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

திடீர் மரணம்

யாழ்ப்பாணம், சனி தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் போது வயிற்றுக்குத்து நோய்க்குளளான ஒருவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வதற்கு மாட்டுவண்டியில் ஏற்றும்போது மரணமானார். புத்தூர் கிழக்கைச் சேர்ந்த கதிரன் சின்னன் என்பவரின் மரணவிசாரணையின்போது இது தெரிவிக்கப்பட்டது.

விசாரணை செய்த மரண விசாரணை அதிகாரி திரு. கனகரத்தினம் இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார். (ந.நி

இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டாராம்

யாழ்ப்பாணம், சனி வேலணையைச் சேர்ந்த கந்தையாகாங்கேசு என்பவர் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டாராம்.

காணி சம்பந்தப்பட்ட தகராறு காரணமாகவே இவர் தாக்குதலுக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

காணி சம்பந்தப்பட்ட

40 ஆண்டு சேவை

மாணவ உலகுக்கு வழிகாட்டியாக வாழ்ந்து, நாட்டுக்கு நல்ல பல முத்துக்களை ஈந்து ஆசிரியசமூகத்தில் மணிவிளக்காகத் திகழ்ந்த ஆசிரியை திருமதி தவமணி கந்தசாமி 40 வருடகால ஆசிரியசேவையின் பின்னர் இன்றுடன் ஓய்வு பெறுகிறார். வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயை தன்னலமற்ற ஒரு ஆசிரியை இழக்கின்றதே யென்று கலங்குகிறது

ஆசிரிய குடும்பத்தில் பிறந்த திருமதி தவமணி கந்தசாமியவர்களின் தந்தையார் காலஞ் சென்ற நாகலிங்கமும் ஒரு தலைமை ஆசிரியராகவிருந்தவர். இவரது கணவர் திரு.கா. கந்தசாமியும் ஒரு தலைமை ஆசிரியர்.

உடுவில் மகளிர் கல்லூரியில் முதல் மாணவியாகத் தேறி, பின்னர் வேம்படி ஆசிரிய பயிற்சிக் கழகத்திலும், கோப்பாய் ஐக்கிய ஆசிரிய பயிற்சிக் கழகத்திலும் 2- வருடம் ஆசிரியை பயிற்சி பெற்று தனது 20-வது வயதில் தான்பிறந்த வட்டுக்கோட்டைக்கு அண்மையிலுள்ள பிளவத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில்ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். 13 ஆண்டுகள் இங்கு தொடர்ந்து பணிபுரிந்தனர்.

இதன் பின்னர் தான் பிறந்த வட்டுக்கோட்டையிலுள்ள திருநாவுக்கரசு வித்தியாசாலையில் ஆசிரிய பணியைத் தொடர்ந்தார். 27 ஆண்டுகள்தடையற்ற சிறபுச் சேவையாற்றி பூரண சேவையை தனது 60-வது வயதில் முடித்துக் கொண்டு இன்றுடன் ஓய்வு பெறுகின்றார்.

இவரிடம் பயின்றபழைய மாணவர்கள் தாம் இப்போதுள்ள நல்ல நிலையை நினைத்து 40 ஆண்டுகள் சேவையாற்றி 60-வது வயதில் ஓய்வு பெறும் இந்த நல்லாசிரியையைக் நன்றி சொல்லுகிறார்கள். படிக்கும்

மார்ச் மாதம் 10-ம் திகதி சௌக்கிய உடலியல் தினம்

படுத்தித்துறை, வெள்ளி அகில இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளும் மார்ச் 10-ம் திகதியை சௌக்கிய, உடலியல் தினமாகக் கொண்டாட வேண்டுமெனக் கல்வியமைச்சு சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளது.

இத்தினத்தில் தேசியக் கொடி பாடசாலைகளிற் பறக்க விடப்படுவதுடன், தேசிய கீதம், வேலையனுபவ கீதம், அணிவகுப்புக் கீதம் ஆகியன மாணவரால் பாடப்படும். உடற்பயிற்சி கண்காட்சிகளுடன், உணவு வகைகள் பற்றிய சுவரொட்டிகள், வீதிப் பாதுகாப்பு முறைகள் பற்றிய படங்கள் காட்சிக்கு வைக்கப்படும்.

பெற்றோரும் அழைக்கப்பட விருக்கும் இவ் விழாவில் சுகாதார நல்வாழ்வு பற்றிய விரிவுரைகளும் இடம் பெறும்.

வடமராட்சியில் இத்தினத்துக்கான ஒழுங்குகளை சுகாதாரப் பகுதியினரும், கல்லூரி அதிபர்களும் சேர்ந்து மேற் கொண்டுள்ளனர்.

செய்திச் சுருக்கம்

பெயர்ப்பிரச்னை

மட்டக்களப்பு, வெள்ளி இன்னும் இருமாதங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கும் மட்டக் களப்பு கடுகதி ரயிலுக்கு பாடும் மீன்? உதயகுமாரியா? எப்பெயர்வைப்பதென மட்டக்களப்பு மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில பரிசீலனை செய்யப்பட்டது. மட்டக்களப்பு இரண்டாவது எம்.பி. உதயகுமாரியெனவும் பட்டிருப்பு எம்.பி. 'பாடும் மீன்' எனவும் பெயர்சூட்டுமாறு சிபார்சு செய்ததால் அடுத்த கூட்டத்தில் தீர்மானிப்பதென ஒத்தி வைக்கப்பட்டது.

0 0 0

வாலிபரில் தங்கியுள்ளது

வேடுவலை வெள்ளி ஒரு நாட்டின் உயர்வு தாழ்விற்கு வாலிபர் சமுதாயமே காரணமாகும். இளைஞர் சமூகத்தின் எழுச்சியினால் பல நாடுகள் முன்னேற்றம் அடைந்துள்ளன என்று வேடுவளை நகரபிதா வேடுவளை ஐக்கிய இளைஞர் முன்னணியில் உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

0 0

சேர் ஒலிவர் யோசனை

பம்பலப்பிட்டி, வெள்ளி ஆசியாவின்பல்வேறு நாடுகளைப்போல் இலங்கையும் பெரும் சங்கடத்திலுள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம் பட்டதாரிகள் வேலைப் பிரச்னை பெரிதாக உள்ளன. இங்கு நிலவும் பேதங்களையும் மொழிப்பிரச்னைகளையும் சகிப்புத் தன்மையாலும் பரஸ்பர விளக்கத்தாலும் தீர்க்கலாம்.

என முன்னாள் மகாதேசாதிபதி சேர் ஒலிவர் குணதிலகா வெஸ்லி கல்லூரி பழையமாணவர் சங்க விருந்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

0 0 0

விடுதலை

பம்பலப்பிட்டி, வெள்ளி முன்னாள் சுதந்திரக் கட்சி வாலிப முன்னணித் தலைவர் திரு.ஹேமாதாபரே லஞ்சக் குற்றச்சாட்டு வழக்கில். விசாரணையின்பின் விடுதலை செய்யப்பட்டார்.

விஜெயகோனை என்பரிடம் இ. போ. ச. வில் வேலை பெற்றுத் தருவதாக 600 ரூபா லஞ்சம் பெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் சாட்சியங்கள் முரண்பாடு காரணமாக நீதிபதி இவரை விடுதலை செய்தார்.

0 0 0

பொறுப்பு ஏற்கவேணடும

தேசியமய விளையாட்டு அமைச்சு சுகததாசா விளையாட்டு அரங்கைப் பொறுப்பேற்று மாநகரசபைக்கு நியாயமான நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று கொழும்பு மாநகரபை ஹுனுப்பிட்டிய வட்டார அங்கத்தவரான மீனாரத் தினம் கேட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரகஞ்ஞை கொலை வழக்கு

கிரிக்கெட்

சென்.ஜோன்ஸின் முதலாவது வெற்றி

யாழ்ப்பாணம், சனி. யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில், நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில்சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 168 ஓட்டங்களைப்பெற்றது. மனோகரன்-63 ஓட்டங்களையும், பிச்-20 ஓட்டங்களையும் பெற்றனர். 2-வது இன்னிங்ஸில், ஸ்கந்தா மொத்தம் 61 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. சிவபாலன் 8 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளையும், நவரட்ணராசா 14 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

சென், ஜோன்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 204 ஓட்டங்களைப் பெற்றது. இதில்,தெய்வேந்திரா, ஜேயரட்ணம், சிவக்குமார், ஓஸ்ரின் முறையே55,38,27, 25 ஓட்டங்களைப் பெற்றனர். 2-வதுஇன்னிங்ஸில் விக்கெட் நஷ்டமின்றி 27 ஓட்டங்களைப் பெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி, ஆட்டமுடிவில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை 10 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இப் போட்டி சென் ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

வருகிற 23-ம்,24-ம் திகதிகளில் படுத்தித்துறை ஹாட்லி கல்லூரியுடன் சென் ஜோன்ஸ் கோஷ்டி தமது மைதானத்தில் மோதவிருக்கின்றது. (தே.நி.)

ச. ச. நிலையங்களின் உதைபந்தாட்டம்

இம்முறை சகலரும் பங்கு பற்றலாம்

யாழ்ப்பாணம், சனி யாழ் சனசமூக நிலையங்களின் விளையாட்டுச் சங்கம் தனது 2-வது வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடாத்துவதற்கு தயாராகிறது. இப் போட்டியில் பங்கு பற்றுவதற்கு யாழ் மாவட்டத்திலுள்ள சகல சனசமூகநிலையங்கள் கிராமமுன்னேற்றச் சங்கங்கள்' அரசாங்க நன்கொடைபெறும் பொதுஸ்தாபனங்கள் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமையன்று விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளுதல் முடிவுற்றதும் அடுத்த மாதம் 4.ம் திகதிஇப் போட்டியில் பங்குபற்றும் கோஷ்டிகளின் பாகம் பிரிக்கும் கூட்டம் யாழ் செயலகத்தில் மாலையில் நடைபெறும்.

இம்முறை இப் போட்டியில் சகல வீரர்களும் பங்கு பற்றுவதற்கும் சென்ற முறையைவிட இம்முறை மிகவிரிவாக நடத்துவதற்கு பல முன்னேற்பாடுகளை இச் சங்கப் பொதுச் செயலாளர் திரு. இ. க.குமரையா மேற்கொண்டுள்ளார்.

சென்ற வருடம் முதன் முறையாக நடாத்தப்பட்ட இச் சுற்றுப்போட்டியில் ஏ பிரிவில் சென்மேரிஸ் சனசமூக நிலையமும் 'பி' பிரிவில் சென் நிக்கலஸ் சனசமூக நிலையமும் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத் தக்கது. [தே.நி]

பருத்தித்துறையில்

புத்தாண்டு போட்டிக்கு விளையாட்டு மச்சம் வருகிறார்

வல்வெட்டித்துறை,வெள்ளி படுத்தித்துறை காரியாதிகாரி பகுதியினர் வடும் புத்தாண்டுத் தினத்தன்று மாபெரும் விளையாட்டுப் போட்டி நடாத்தவுள்ளனர்.

இதில் 25 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி, 15 மைல் மரதன் ஓட்டப்போட்டி, தாச்சி, கட்டுமரம் வலித்தல், மல்யுத்தம், பெண்

பொலிசார் கண்டு பிடித்தனர்

யாழ்ப்பாணம், சனி வீட்டிலிருந்து காணாமல் போனதாக புகார் செய்யப்பட்ட ஒரு இளைஞனையும் மற்றொரு யுவதியையும் வெவ்வேறு இடங்களிலிருந்து பொலிசார் கண்டு பிடித்தனர்.

கரையூரைச் சேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்ட இவ் விருவரையும் கரையூர் பொலிசாரே கைது செய்து யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

18 வயதுடைய இளைஞனும் 14 வயதுடைய யுவதியும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அவரவரின் பெற்றோருடன் செல்ல அனுமதிக்கப்பட்டனர். [கா.நி]

40வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
மற்றும் பலர் நடித்த
ஒளி விளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
(எஸ். ரி. ஆர். வெளியீடு)

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
மனோகர் - வீரப்பா,
ராஜசுலோசனா
நடித்த
கைதி
கண்ணாயிரம்

இணுவில்
ஸ்ரீ காளிங்கன்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெய்சங்கர் - விஜயா
நடித்த
பட்டணத்தில் பூதம்

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி — சாவித்திரி
நடித்த
அன்னையின் ஆணை

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா

5-01.

இன்று பிறந்தவர்களுக்கு— கற்றதால் பயன் கைமேல் கிடைக்கும். பொறியியலாளர் போற்றப்படுவர். சிலர் வெளிநாட்டுப் பயணத்தையும் மேற்கொள்வர். மாணவர்களுக்கு கல்வியில் அதிக ஆர்வம் ஏற்படும். மண வாழ்க்கையில் தென்றல் வீசும், சகோதரியின்நிலைகுறித்து சஞ்சலம் ஏற்படலாம். பொதுத்துறையில் ஆர்வம் கிடைக்கும் நல்லாண்டாகும்.

மேஷம்- நத்தைவேகம். சுந்தர்ப்பம் தவறலாம்.
ரிஷிபம்- பேச்சுவன்மை பெறும் புகழ் உண்டு
மிதுனம்- சூழ்ச்சிமிகுதி, சோதனைக் கட்டம்.
கடகம்- வாகனநலன், வரவிலும் திருப்தி.
சிம்மம்- புத்திரசுகம் புதியபாதை.
கன்னி- அத்நியவாசம், அகாலபோசனம்.
துலாம்-குடும்பமகிழ்ச்சி குழந்தைச் செல்வம்.
விருச்சிகம்-கிட்டிவரும் பகை எட்டிநில்.
தனுசு- குரு விசுவாசம் குறிக்கோள் வெற்றி.
மகரம்- தொழில்நலன் தொடர்புகள் பெருகும்.
கும்பம்- வரவில்உயர்வு வாழ்த்தும் உண்டு.
மீனம்- சிந்தனைக்கிலேசம், செய்தொழில் நஷ்டம்.

சோதிடக்கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை

திருடமுயன்றவர் பட்டபாடு

குருப்பசிட்டி, வெள்ளி வியாபார நிலையமொன்றில் திருட முயன்ற வாலிபர் வகையாக அகப்பட்டு பெண்மணியொருவரிடமாப் பிசைந்த கைகளையுடைக்கப்பட்டாராம்.

அளவெட்டியைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் மல்லாகப் புகையிரத நிலைய வீதியுள்ள கடையொன்றில் சிகரெட் பெட்டிகளைக் களவாடமுயற்சிக்கும்போது கடைப்பின் புறமாகஇருந்த பெண்மணியிடம் சிக்கிக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாப்பிசைந்து கொண்டிருந்த இப்பெண் சத்தம் கேட்டு வந்து வாலிபரை கைகளால் தாக்கினாராம்.

காணி சம்பந்தப்பட்ட தகராறு காரணமாகவே இவர் தாக்குதலுக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

காணி சம்பந்தப்பட்ட விடயத்தில் தமக்கும் வேலணையைச் சேர்ந்த தியாகன் பொன்னையா ஆகிய இருவருக்குமிடையே நீண்ட நாட்களாக சிறு சச்சரவு ஏற்பட்டிருந்ததென்றும் இவர்கள்தான் கம்பியால் அடித்தார்களென்று அடிகாயங்களுக்குள்ளாகி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் காங்கேசு, பொலிஸாருக்குத் தெரிவித்தார். இது பற்றி யாழ். பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ந.நி.)

பரிசை பெற்றோரிடம் கொடுப்பார்

பருத்தித்துறை, வெள்ளி அண்மையில் இழுக்கப்பட்ட 'சியவச' சுவீப் போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவன் பொன்னம்பலம் பாலராஜா ரூபா ஆயிரம் பரிசாகப் பெற்றுள்ளார்.

எட்டாம் வகுப்பு மாணவனான இவர் தமக்கு கிடைத்துள்ள பணத்தை பெற்றோரிடமே ஒப்படைக்கவிருப்பதாக கூறினார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 22 2—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, -35 சைவநற்சிந்தனை, 6-40 சுத்தோலிக்கநற்சிந்தனை, -45 துதிப்பாடல்கள், -30 குரல்வகை, 8-00 சைவவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திரானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 மானமஞ்சரி

இரவு 6-15 குதூகலம், 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை. 7-30 உரையாடல், 7-40 வாத்தியஇசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைச்சித்திரம், 10-00 நேயர்விருப்பம்.

மாணவர்கள் தாம் இப்போதுள்ள நல்ல நிலையை நினைத்து 40 ஆண்டுகள் சேவையாற்றி 60-வது வயதில் ஓய்வு பெறும் இந்த நல்லாசிரியைக்கு நன்றி சொல்லுகிறார்கள். படிக்கும் மாணவர்கள் இவர் பிரிவைத் தாங்கமுடியாது கண்கலங்குகின்றனர்.

ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் வீட்டிலிருந்தே எதிர்காலச் சிற்பிகளுக்கு ஓய்வு நேரத்தில் கல்விபூட்டி அவர்களை நல்லவர்களாக்க வேண்டுமென திட்டம் வைத்திருக்கிறார்.

எம். ஏ. பட்டதாரியாகி தொழில்அதிகாரியாகக்பணியாற்றுகிறார். இவர் பெற்றமூத்தசெல்வம் பரமநாதன் மற்றவர் சுதிரவேல்நாதன் விலைமதிப்பு அதிகாரியாக உள்ளவர் மற்றவர்கள் பள்ளியில் பயில்கிறார்கள். இவர்கள் குடும்பமே ஒரு கல்விக் குடும்பமாகத் திகழ்கிறது.

இளைப்பாறும் நல்லாசிரியையை ஆசிரிய உலகும், மாணவ உலகும் என்றும் மறக்கமாட்டாது.

பழைய மாணவன்

22 வருட சேவை

யாழ். ஆனைப்பந்தியடி மெதடிஸ்ற் மிஷன் பாடசாலைத் தலைமையாசிரியை திருமதி கிறேஸ் முத்தம்மா செல்லத்துரை இருபத்திரண்டு வருட சேவையின் பின் இம்மாதம் 25-ந் திகதி ஓய்வு பெறுகிறார். கரவெட்டியைச் சேர்ந்த இவர் பல பாடசாலைகளில் உதவி ஆசிரியையாகப் பணியாற்றியுள்ளார்.

இவர் தமது பேராற்றல், நிர்வாகத் திறமை, கடமையுணர்ச்சி ஆகியவற்றால் பெற்றோர், மேதிகாரிகளின் பாராட்டுதல்களைப் பெற்றவர். ஆனைப்பந்தியடி மெதடிஸ்ற் மிஷன் பாடசாலையில் மாணவர் தொகையை அதிகரிக்கச் செய்து தமது அயராஉழைப்பினால் இதனை ஓர் முதற்தரக் கனிஷ்ட பாடசாலையாக்கினார்.

இவர் வித்தியாபகுதியால் நடத்தப்படும் விளையாட்டுப்போட்டிகளில் பாடசாலை மாணவர்களைக் கலந்துகொள்ளச் செய்து பல அம்சங்களில் முதலிடம் பெறச் செய்தார். தோட்டவேலை, தையல், கைப்பணி என்பன கற்பிக்க வழிவகுத்தார். இவ்விதம் பெரும் பணியாற்றிய இத்தலைமையாசிரியையை எல்லோரும் முத்தக்கா என்றே அன்புடன் அழைப்பர்.

இவர் பாடசாலைப் பணியோடு சமூகசேவை செய்வதிலும் ஆர்வமுடையவராகத் திகழ்ந்தார். கிறிஸ்தவநெறியை தம் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகி வந்துள்ளார். இவர் ஆனைப்பந்தியில் சிறுவர் பாடசாலையை ஆரம்பித்து தமது சேவையைத் தொடர்கிறார்.

பெ[illegible]சங்கடத்திலுள்ளது. ஹ[illegible]னுப்பிட்டிய வ[illegible]ர வேலையில்லாத் திண்டாட்டம் பட்டதாரிகள் வேலைப் அங்கத்தவரான மீனாரத் தினம் கேட்டுள்ளார்.

ஊரங்குணை கொலைவழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரம்

குடும்பசிட்டி, வெள்ளி

ஊரங்குணை கொலைவழக்கு விசாரணை முடிவில் மூன்றாம் எதிரி எஸ். பொன்னம்பலம் விடுதலையானார். மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் இக்கொலை வழக்கை சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தி ஏனைய இரு எதிரிகளையும் சுப்ரீம் கோர்ட் விசாரணைக்குநிற்குமாறு உத்தரவிட்டார். இருஎதிரிகளும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் பொலிசார் இவ்வழக்கில் ஊரங்குணையைச் சேர்ந்த தம்பு நல்லையா என்பவரை சென்றவருடம் டிசம்பர் மாதம் 22ம்- திகதி கொலை செய்ததாக அதேயிடத்தைச் சேர்ந்த எஸ் கனகலிங்கம். எஸ். சுப்பையா, எஸ். பொன்னம்பலம் ஆகிய மூவருக்கும் எதிராக குற்றஞ் சாட்டியுள்ளனர்.

சுன்னாகம் பொசாரின் உதவியுடன் வழக்கை வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் நடாத்தினார் எதிரிகள் தரப்பில் அட்வகேற் கே. வி. எஸ். சண்முகநாதன் புறக்டர் சிவ சிறிதரனின் அனுசரணையுடன் ஆஜரானார்.

சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு நிற்க உத்தரவிடப்பட்ட இருஎதிரிகளும் தகப்பனும் மகனுமாவர் விசாரணையின் போது மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ரி. ஞானசுந்தரம், எஸ். அன்னலட்சுமி, ரி. சின்னஞ்சி, ரி. பொன்னையா, ஆ. பொன்னையா. பொலிஸ் சார்ஜண்ட் கே. சின்னத்தம்பி, கான்ஸ்டபிள்கள் எஸ். ரவீந்திரராசா, ஆரியரத்தினா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

ஏழைப்பிள்ளைகளுக்கு உதவ வேண்டுகோள்

குடும்பசிட்டி, வெள்ளி

மாவட்ட அரசாங்க அதிபர் பிரான்ஸிஸ் பீட்டர்ஸ் தலைவராகக்கொண்டயாழ்ப்பாணம் உறுதுணையாளர் சேவைச்சங்கத்தினர் யாழ். மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக பாடப்புத்தகங்கள் விநியோகம் செய்வதற்கு நன்கொடை நிதி உதவி வழங்குமாறு கோரி கடிதமூலம் வேண்டியுள்ளனர்.

ஏவுகணைஉற்பத்தி

வாஷிங்டன், பெப்21

அமெரிக்கா தற்காலிகமாக நிறுத்தியுள்ள ஏவுகணை உற்பத்தியை மீண்டும்ஆரம்பிக்கவேண்டும் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் கருத்து வெளியிட்டிருக்கிறார். கம்யூனிஸ்ட் நாடுகளின் ஏவுகணை உற்பத்தி அபிவிருத்தியடைந்து வருவதே இதற்கு காரணமாம்.

1975-ம் ஆண்டு வரையில் சீனா 20 ஏவுகணைகளைத் தாயாரித்து விடும் என்றும் அவை அமெரிக்கா வைத் தாக்கக்கூடியவையாக விடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விளையாட்டமைச்சர் வருகிறார்

வல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்தித்துறை காரியாதிகாரி பகுதியினர் வடும் புத்தாண்டுத் தினத்தன்று மாபெரும் விளையாட்டுப் போட்டியொன்றை நடத்த விடுக்கின்றனர், இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக தேசிய விளையாட்டமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசா கலந்துகொள்ள விருக்கிறார்.

இப்போட்டியில் பின் வடும்ந நிழ்ச்சிகளிடம்பெற விடுக்கின்றன. கரபந்தாட்டம், 25 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி, 15 மைல் மரதன் ஓட்டப்போட்டி தாச்சி, கட்டுமரம் வலித்தல், மல்யுத்தம், பெண்களுக்கான வலைப்பந்தாட்டம், கயிறு அடித்தல், (இந்திய தேசிய விளையாட்டு), எல்லே (இலங்கை தேசிய விளையாட்டு). இப்போட்டிக்கு விளையாட்டு அதிகாரி திரு. எஸ். கதிர்காமத்தம்பி பொறுப்பாக இருப்பார்.

நீச்சல் போட்டியில் பொலிஸார் தோற்றனர்

யாழ்ப்பாணம், சனி

பொலிஸாரைக் கண்டதும் கடலில் ஓட்டம்பிடித்த மீனவர்களை, நீந்திச் சென்றும்கூட பிடிக்க முடியாது திரும்பினார்களாம் பொலிஸார். வலைக்களவு டைனமட் வைத்து மீன் பிடிப்பது ஆகியனவற்றைத் தடுக்கப்வென நிறுவப்பட்ட கரையூர் பொலிஸார் கடலில் ரோந்து சுற்றவென ஒரு யந்திர வள்ளமாவது இல்லாததே இதற்குக் காரணமென அறிவிக்கப்பட்டுள்ளது.

டைனமட் மூலம் மீன் பிடித்துவிட்டு கடலில் ஓட்டம் பிடித்தவர்களை நீந்திச் சென்றும் கைது செய்ய முடியாது திரும்பிய கரையூர் பொலிஸார் டைனமட் மூலம் பிடிக்கப்பட்ட மீன்களுடன் சென்ற வேறொரு லொறியைக் கைப்பற்றினர்.

சுமார் 4000 ரூபா பெறுமதியான 20,000 ருத்தல் நிறையுள்ள பாரை மீன்கள் இந்த லொறியிலிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கரையூர் பொலிஸாரால் நேற்றுக் காலை கைப்பற்றப்பட்ட இந்த மீன்கள் யாழ்ப்பாணம்மாஜிஸ்டிரேட் கோர்ட்டின்உத்தரவின்பேரில் நிலத்துள் புதைக்கப்பட்டன.

சம்பந்தப்பட்ட லொறி 10,000 ரூபா பிணையில் செல்ல விடப்பட்டதோடு சந்தேக நபர்கள் இருவரும் தலா 500 ரூபா பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (கா. நி.)

சைக்கிள் ஓட்டப் போட்டி

யாழ்ப்பாணம், சனி

மானிப்பாய் இளம் கலைஞர் கழகத்தினர் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு அடுத்தமாதம் 26-ம் திகதி அகில இலங்கை ரீதியாக 30 மைல் சைக்கிளோட்டப் போட்டி ஒன்றை நடாத்தவிடுப்பதாக கழகச் செயலாளர் அறிவித்துள்ளார்.

அனைவரின் ஆணை

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
இனசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா நடித்த
குடியிருந்த கோயில்

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, & 9-45 p. m.
Pre Poya-Poya 10-30 a. m.
Raquel Welch
in
ONE MILLION YEARS B. C.
(Col r)
Owing to limited Engagements advance Bookings for Balcony, Reserve and st Class are available.

கிங்ஸ்லி
வெம்பிளி
(கண்டி)

பிளாஸா
ஸ்ரீகிருஷ்ண
(திருமலை)

இன்று முதல்
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)

மற்றும் சினிமாஸ்திரைகளில்

சிவாஜிகணேசன் — கே.ஆர். விஜயா
முத்துராமன், எல். விஜயலக்ஷ்மி,
நாகேஷ், குமாரிசச்சு
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின் மகோன்னத ஈஸ்ட்மென் கலர்ப் படைப்பு

ஊர் டிவரை உறவு

இசை: விஸ்வநாதன் பாடல்கள்: கவிஞர்கண்ணதாசன்

அத்துடன் காண்பிக்கப்படுகின்றது
யாழ். வெலிங்டன் திரையில்

மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்
S S. வாசன்
அவர்களால்
ஈஸ்மன்கலரில்படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற
இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்
மற்றும்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர்தேர்தல் இடம்பெறும் வேளையில்

மேற்குஜேர்மன் எல்லையில் கம்யூ. இராணுவப் பயிற்சி

உலகத் தலைநகர்களில் பதட்டம்

டாட்டா, பெப்ரவரி 21

மேற்கு ஜேர்மனியின் எல்லைக்கருகாமையில் சோவியத்யூனியனும் கிழக்கு ஜேர்மனியும் அடுத்த மாதம் முற்பகுதியில் ராணுவப் பயிற்சிகள் நடத்தத்திட்டமிட்டுள்ளன.

மேற்கு பெர்லினில் அதிபர் தேர்தல் நடைபெறவிருக்கும் சந்தர்ப்பத்தில் இந்த ராணுவப் பயிற்சிகள் இடம்பெறவிருக்கின்றன.

மேற்கு பெர்லினில் அதிபர் தேர்தல் நடப்பதைக் கிழக்கு ஜேர்மனும் ரஷ்யாவும் ஏற்கனவே ஆட்சேபித்துள்ளன. ஆனால் இந்த ஆட்சேபத்தை மேற்கு ஜேர்மனி உதாசீனம் செய்துவிட்டது. இந்தத்தேர்தலுக்காக மேற்குபெர்லினுக்கு மேற்கு ஜேர்மன் சட்டசபை உறுப்பினர்கள் கிழக்கு ஜேர்மனி வழியாகப் போவதற்குக் கிழக்கு ஜேர்மனி தடை விதித்துள்ளது. இந்தத் தடைகளையும் ஆட்சேபனைகளையும் பொருட்படுத்தாமல் மேற்கு ஜேர்மனி அதிபர் தேர்தலை பெர்லினில் நடத்தவிருக்கின்றது. மேற்கு பெர்லினின் இந்த நடவடிக்கைக்கு சமீபத்தில் அங்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் பிரதமர் ஆதரவு தெரிவித்திருக்கிறார். அமெரிக்க அதிபர் திரு. நிச்சார்ட் நிக்ஸனும் விரைவில் மேற்கு பெர்லினுக்கு விஜயம் செய்யவிருக்கின்றார்.

அடுத்த மாதம் 5-ம் திகதி மேற்கு பெர்லினில் அதிபர் தெரிவு இடம் பெறவிருக்கின்றது. இந்த நிகழ்ச்சியுடன் ஒரே சமத்தில் மேற்கு ஜேர்மனியின் எல்லைக்கருகாமையில் ரஷ்யாவும், கிழக்கு ஜேர்மனியும் ராணுவப் பயிற்சிகள் மேற்கொள்ள முடிவுசெய்துள்ளன. இந்தப் பயிற்சிகளை 'வார்ஸோ' ஒப்பந்த நாடுகளின் ராணுவ சுப்ரீம் கொம்மாண்டர் ரஷ்யாவைச் சேர்ந்த மார்ஷல் யொக்கோஸ் விக்கி மேற்பார்வை செய்வார்.

இந்த நிகழ்ச்சிகள் உலக அரங்கில் பெருத்த நெருக்கடியைத் தோற்றுவிக்கலாம் என்று உலக தலைநகர்களில் அஞ்சப்படுகின்றது.

புதுடில்லியில் ஆதம்மாலிக்

புதுடில்லி, பெப். 21

இந்தோனேஷிய வெளிநாட்டமைச்சர் டாக்டர் ஆதம்மாலிக் புதுடில்லிக்கு வந்திருக்கிறார். இந்தியாவில் அவர் நான்கு நாட்கள் தங்கியிருப்பார். இந்தியாவுக்கு வந்ததில் தமக்கு பெரு மகிழ்ச்சியென்றும், ஒருசில நாட்களே இருந்தாலும் தமது வருகை இருநாடுகளுக்கும் பயனுள்ளதாக விருக்குமென்றும் டாக்டர் ஆதம்மாலிக் கூறினார். டாக்டர் ஆதம்மாலிக் இன்று இந்திய அதிகாரிகளுடன் உத்தியோக பூர்வமான பேச்சுக்களை ஆரம்பிக்கவிருந்தார். பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியையும் அவர் சந்திப்பார்.

பாகிஸ்தான் நெருக்கடி

48 மணிநேரத்தில் 20 பேர் பலி

தீவட்டி ஊர்வலம் நடத்த மாணவர்கள் ஏற்பாடு

ராவல்பிண்டி, பெப். 21

கிழக்குப் பாகிஸ்தானில் கடந்த 48 மணித்தியாலத்தில்மாத்திரம் பொலிஸ்ராணுவத் தாக்குதல்களில் 20 பேர் பலியாகியிருப்பதாகக் கருதப்படுகின்றது.

ஆஸாத் என்ற பத்திரிகை வெளியிட்டுள்ள ஒரு செய்தியில் டாக்காவில் மட்டும் 20 பேர் கொலையுண்டிருப்பதாக அறிவித்துள்ளது.

இன்று மாலை டாக்கா வீதிகளில் தீவட்டி ஊர்வலம் ஒன்றினை நடத்துவதற்கு மாணவர்கள் ஏற்பாடுகள் செய்கின்றனர்.

இதற்கிடையில் அதிபர் அயூப்கான் நடத்தும் ஆலோசனைகளில் கலந்து கொள்ள சிறையிலிருக்கும் அவாமிக் கட்சியினர் தலைவர் நவாப்சாதா நஸருல்லாகான், ராவல்பிண்டிக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'அகதவா' சதி வழக்கு விலக்கிக் கொள்ளப்படாத வரை நவாப்சாதா அயூப் ஆலோசனைகளில் கலந்து கொள்ளமாட்டார் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இன்று மாலையில் நவாப்சாதா ராவல் பிண்டிக்கு வருவாராஎல் ஜனநாயக செயல் கமிட்டி அவசரமாகக் கூடி தற்போதைய அரசியல் நிலைமை பற்றி ஆலோசனைகள் நடத்தும் என்று கமிட்டியின்கன்வீனர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் நாட்டில் எழுந்துள்ள நெருக்கடியான நிலைமைகள் சமாளிப்பது பற்றி அயூப்கான் தமது அமைச்சர்களுடன் தீவிர ஆலோசனைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

கழகத்தைப் பிளவுபடுத்திய அவச்சொல்வரக்கூடாது

நெடுஞ்செழியன் கூறுகிறார்

சென்னை, பெப் 21

அண்ணாவுக்குப் பின் நெடுஞ்செழியனும் கருணாநிதியும் போட்டி போட்டுக் கொண்டுகழகத்தைப் பிளவுபடுத்தி பாழாக்கிவிட்டார்கள் என்ற அவச்சொல் வரக்கூடாது என்று சென்னையில் திருவல்லிக்கேணி தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. நெடுஞ்செழியன் கூறினார்.

அமைச்சரவையில் இருக்கலாம். அதில் ஒன்றும் கட்டாயம் இல்லை.

நான் 6-ந் திகதிக்கு முன்பே என்நிலையை கருணாநிதியிடம் கூறி அமைச்சரவையில் இருக்கமாட்டேன் என்றும் தெரிவித்து இருந்தேன் என்றும் தெரிவித்தார்.

பி. சிற்றரசி ஆகியோர் இன்னும் தொண்டாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்ன பதவியிலா இருக்கிறார்கள்?

மாற்றுக் கட்சியினரின் சொல்லுக்கும் தூண்டுதலுக்கும் இரையாவிடாதீர்

தமிழ்நாடு கோயில்கள்: புதிய அமைச்சரின் விருப்பம்

சென்னை, பெப். 21

தமிழக அறநிலைய பாதுகாப்பு அமைச்சர் திரு. கே. வி. [illegible]பையா தமிழ்நாட்டில் உள்ள கோவில்கள் யாவும் யாத்திரீகர்களைக் கவரத்தக்கவாறு அமையத் தான் திட்டமிட்டுள்ளதாக பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

வருவாயும் அதிகரிக்குமெனத் தெரிவித்தார்.

அதிக வருவாய்ள்ள கோவில்களின் நிதி சமூகப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படவேண்டும், கோவில் சொத்துக்களை தவறான வழியில் பயன்படுத்தக்கூடாது, கோவில் நிலங்களுக்கு [illegible]ய வாடகைப்பணம் வசூலிக்க

இளைஞர் நலன் பாதுகாப்புசபையின் பணி

யாழ்ப்பாணம், சனி

'அனாதையாக்கப்பட்ட பிள்ளைகள் பணத்தால் மாத்திரம் போஷிக்கப்படமுடியாது. யாருமற்றவர் என்ற உணர்வே கொடியது. இத்தகைய பிள்ளைகளுக்கு உற்றார் உறவினர் என்ற உறவுமுறை பாராட்டக்கூடிய நல்லெண்ணம் படைத்த சில குடும்பங்களைத் தெரிவு செய்து, இப்பிள்ளைகளின் அன்பை பாசத்தை ஓர் இல்லத்துடன் இணைப்பதே தமது நோக்கங்களுள் ஒன்று என்றும் உடல் வளர்ச்சியைப் போற்றுகின்ற அதே வேளையில் குழந்தையின் உள வளர்ச்சியையும் பாதுகாப்பது அவசியம் என்றும்இளைஞர் நலன் பாதுகாப்புச்சபை தனது நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இச்சபைஇதுபற்றிமேலும் தெரிவித்துள்ளதாவது:

எமதுசமூகத்தில் அனாதைகளாகவும், பெற்றோர்களால் கைவிடப்பட்டவர்களாகவும், பெற்றோர்களுக்கு பணவசதியின்மையால் தமது பிள்ளைகளைக் காப்பாற்றமுடியாத குடும்பங்களையும் காண்கிறோம். இவர்களுள் முதலிடு பிரிவினருக்கும் விசேஷமாகவும்' மூன்றாவது பிரிவினருக்கு பொதுவாகவும் எமது சங்கம் தன்னால் இயன்ற உதவியை செய்ய முயற்சிக்கின்றது.

அரசாங்க உதவியுடன் மனிதாபிமானமிக்க மதஸ்தாபனங்களும் பொதுஸ்தாபனங்களும், நல்லெண்ணம்படைத்த தனி நபர்களும் கொடுக்கும் கொடைகளே இப்பிள்ளைகளை ஓரளவுக்குப்பேண உதவுகிறது.

எமது மாவட்டத்தில் ஒடுநூறு பிள்ளைகளைப்பற்றித்தான் நாம் அக்கறைப்படுகின்றோம். இந்தமட்டில்எம்மவர்கள் அதிர்ஷ்டசாலிகளே. யுத்தம், இயற்கைக் கோளாறுகள் போன்ற சம்பவங்களை அடுத்து பல உலக நாடுகளில் பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள்இக்கொடிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். நாகரிகம் படைத்த சமூகங்கள் இந்தசவாலை ஏற்று இப்பிள்ளைகளை உணர்வால் கல்வியால் செல்வத்தால் குடும்பங்களுடன் இணைத்து சமூகத்துடன் ஒன்றிவாழ வைத்துள்ளனர். எமது நாட்டிலும்இத்தகைய நல்லெண்ணம் படைத்தவர்கள் இல்லையென்றுகூறிவிடமுடியாது. அவர்களின் ஒத்துழைப்பைப்பெற்று இப்பிரச்னைகளைத் தீர்க்கலாம் என்று எமதுசங்கம்நம்புகின்றது.

இப்பிள்ளைகளின் மனநிலை ஸ்திரப்படுத்தப்படல் வேண்டும். ஏனைய பிள்ளைகளைப் போல் சமூக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவும், சந்தோஷமாகப் பொழுதுபோக்கவும் விடும்புவது நியாயமே. அதற்காக கல்வித்துறையில் பயன்தரும் சுற்றுலாக்களையும் சங்க சார்பில் பிள்ளைகளை சந்தித்துள்ளார்கள். அவர்களைப்பற்றி அக்கறை கொண்டுள்ள சிலராவதுசமூகத்திலுண்டென்ற உணர்வை ஏற்படுத்த முயற்சிக்கின்றோம்.

இந்தத்துறையில் சிறியளவில் எங்கள் சங்கம் முயற்சிசெய்ய ஆரம்பித்துள்ளது. ஆரம்பத்தில் நெசவுத் தொழிலில பெண்பிள்ளைகளுக்கு பயிற்சி அளிக்கக்கூடிய பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேற்கொண்டும் இது போன்றமுயற்சிகளுக்கூடாக நிலையங்களை விட்டு வெளியேறும் பிள்ளைகளுக்கு தாமாக உழைக்கும் வாய்ப்புகளும் ஏற்படுத்தப்படுகிறது.

பிள்ளைகளில்லாதவர்களும் சமூகசேவர்களும் மற்றும் அனாதைப் பிள்ளைகளைப் பேணும் மனோபாவமுடையஎத்தனையோ குடும்பங்கள் உள்ளன. இவர்களை நாம் விளம்பரம்மூலம் வெளிப்படுத்தி அவர்களுடைய நோக்கங்களை ஆராய்ந்து, பிள்ளைகளை இவ்வில்லங்களில் சேர்ப்பதற்கு திட்டமிட்டுள்ளோம். அத்துடன் இப்பிள்ளைகளுக்கு யாதொரு இன்னலுமில்லாமல் அவர்களுடைய எதிர்கால வாழ்க்கையை ஸ்திரப்படுத்தக் கூடிய மாற்றுப் பெற்றோர்களையே தெரிந்தெடுக்கப்படும்

இறந்தவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்தவர் யார்?

சடலம் சவச்சாலையில் கிடக்கிறது

யாழ்ப்பாணம், சனி

யத்தை பொலிசார் தெரி

Digitized By Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மறக்க முடியாது'

வல்வெட்டித்துறை, வெள்ளி

''உலகத்தமிழ்மக்கள் மனதில், என்றும் இடம்பெற்றவர் காலஞ்சென்ற தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணாவாகும். தமிழர்கள் சமுதாயத்திலே புரையோடியிருந்தசாதிக்கொடுமைகளை ஒழிப்பதற்காக அவர் பாடுபாட்டார். தமிழர்கள் எல்லோரும் இதயம்குளிர ஒரு தமிழ் நாட்டையே அவர் பெற்றுத்தந்தார். இதனை யாரும்மறக்கமுடியாது என தொண்டமானாறு அரசடி விளையாட்டு மைதானத்தில் அறிஞர் அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக நடைபெற்ற கூட்டத்தில் படுத்தித்துறை எம், பி. கே. துரைரத்தினம் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

இக்கூட்டத்திற்கு ஆயுள்வேத வைத்தியர் திரு. வி. சின்னக்கண்டு தலைமைவகித்தார்,

திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது: ''இந்திய மக்களின்ஒருமைப்பாட்டை நிலைநிறுத்தி போராட்டத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தவர் அறிஞர் அண்ணா. மதம் புனிதமானது என்றும் மதத்தை மாசுபடுத்த முயல்பவர்களையே களையவேண்டும் எனவும் அவர் கூறிவந்தார். அவர் தமிழுக்காகவும் அரசியலுக்காகவும் பாடுபட்டவர்''

திருவாளர்கள் நெடுஞ்செழியன், ஏ. விசாகரத்தினம், அத்தண்ணு, மனோகரன், சி. கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் பேசினர்.

0 0

கலாமன்றம் அஞ்சலி

யாழ்ப்பாணம். சனி

திருநெல்வேலி கலாமன்ற மண்டபத்தில் அமரர் அண்ணாதுரை இரங்கற்கூட்டம் நடைபெற்றது, திரு கே. பரமநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு, ஆர். சத்தியசீலன் திரு. கே. கந்தையா ஆகியோர் உரையாற்றினர். கலாமன்றம் இதனை ஒழுங்கு செய்திருந்தது. (ந. நி)

0 0 0

அனுதாபக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரிச்சந்திக்குஅருகாமையில் திருநெல்வேலி கலைக்கோவில் ஆதரவில் இம்மாதம் 23-ந் திகதி மாலை அண்ணா அனுதாபக்

அண்ணாவுக்குப் பின் நெடுஞ்செழியனும் கருணாநிதியும் போட்டி போட்டுக் கொண்டுகழகத்தைப் பிளவுபடுத்தி பாழாக்கிவிட்டார்கள் என்ற அவச்சொல் வரக்கூடாது என்று சென்னையில் திருவல்லிக்கேணி தேரடித்தெருவில் நடைபெற்ற அண்ணா அஞ்சலிக் கூட்டத்தில் நாவலர் நெடுஞ்செழியன் கூறினார்.

அவர் பேசியதின் விபரம் வருமாறு:

அண்ணாவுக்குப் பின் கருணாநிதியும் நெடுஞ்செழியனும் போட்டி போட்டுக் கொண்டு கழகத்தை பிளவுபடுத்திவிட்டார்கள் - பாழாக்கிவிட்டார்கள் என்ற அவச்சொல் ஏற்பட்டுவிடக் கூடாது என்றே பெரிதும் விரும்புகிறேன்.

நான் கல்லூரியில் படிக்கும்போதே ரூபா 2 அனுப்பி என்னை திருவாரூரில் பேசவைத்தவர் கருணாநிதிதான். கட்சித் தலைவர் தேர்தலுக்குப் பின் நான் தலைவன் இல்லை என்பதற்காக கருணாநிதியை மதிக்காமல் இல்லை. தலைவர் முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார். மந்திரிகள் முறைப்படி நியமிக்கப்படுகிறார்கள். ஆகவே விருப்பவையில் இருக்கலாம். அதில் ஒன்றும் கட்டாயம் இல்லை.

நான் 6-ந் திகதிக்கு முன்பே என்நிலையை கருணாநிதியிடம் கூறி அமைச்சரவையில் இருக்கமாட்டேன் என்றும் தெரிவித்து இருந்தேன். அவர்களும்கூட சிந்தித்துதான் முடிவெடுத்திருப்பார்கள்.

மக்களுக்கு பணியாற்ற விரும்பினால் ஆட்சியில் இருந்துதான் பணியாற்ற வேண்டுமென்று இல்லை.

அண்ணா சொல்லிக் கொடுத்துவிட்டுச் சென்ற கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு என்ற சொல் காத்து பணியாற்றுவேன்.

பொதுச்செயலாளர் பதவியை எப்படியாவது பெற்றுவிட வேண்டுமென்று அமைச்சரவையை பெற்றுவிட்வேண்டுமென்று அமைச்சரவையில் இல்லையென்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் பலர். பொதுச்செயலாளர் பதவி இல்லாமலேயே பணியாற்றமுடியும்.

தி. மு. க. வில் 10லட்சம் தொண்டர்கள் இருக்கிறார்கள். அத்தனைபேரும்அமைச்சர்களாகிவிட முடியுயா?

எனக்கு முன்னதாக சேர்ந்த என். வி. நடராசன், சி. பி. ஆதித்தனார் தமிழ்நாட்டில் உள்ள கோவில்கள் யாவும் யாத்திரீகர்களைக் கவரத்தக்கவாறு அமையத்தான் திட்டமிட்டு வருவதாக பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

யாத்திரிகர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுப்பது தனது நோக்கமெனவும் கோவில்களைச் சுற்றி ஒழுங்காக கடைகளைக் கட்டி வாடகைக்குக் கொடுக்கத் தான் விரும்புவதாகவும் இதனால் ஒழுங்கற்றநிலை நீங்குவதோடு கோவில்களின் கோவில்களின் நிதி சமூகப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படவேண்டும், கோவில் சொத்துக்களைதவறான வழியில் பயன்படுத்தக்கூடாது, கோவில் நிலங்களுக்குரிய வாடகைப்பணப் வசூலிக்க வேண்டும் என்க கூறிய அமைச்சர் கோவில்களின் நிர்வாகம், குறைபாடு ஆகியனபற்றி அறிந்து அவற்றிற்குப் பரிகாரம் தேடுவதற்காகத்தான் முக்கிய கோவில்களுக்கு அடிக்கடி விஜயம் செய்யப்போவதாகத் தெரிவித்தார்.

மாற்றுக் கட்சியினரின் சொல்லுக்கும் தூண்டுதலுக்கும் இரையாவிடாதீர்கள் என்று கழகத்தோழர்களையும் மக்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

அன்று அமைச்சர்களோடு மலர் வளையம் வைக்கச் செல்லாத காரணத்தால் என்னை இழிந்தவன் என்று எண்ணிவிடாதீர்கள். என்னை அழைத்திருந்தால் நிச்சயம் சென்றிருப்பேன்.

திருவல்லிக்கேணித் தொகுதியிலிருந்து செல்ல வேண்டும் என்ற வேண்டுகோளுக்கிணங்கித்தான் தனியாகச் சென்றேன்.

பின்னர் அமைச்சர்கள் என்னை வேண்டிக் கொண்டதற்கிணங்க அவர்களுடன் சென்று மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினேன். இவ்வாறு நெடுஞ்செழியன் பேசினார்.

கூட்டத்தில் அண்ணாவின் மறைவுக்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 3 நிமிடம்மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மே.வங்கத்தில் அஜாய்முகர்ஜி முதன் மந்திரியாகிறார்

ஜோதி பாசு துணைப்பிரதமர்; பொலிஸ்இலாகாவிஷயத்தில்உடன்பாடு

புதுடில்லி, பெப்.21

மேற்கு வங்காளத்தின் புதிய முதலமைச்சராக பங்ளா காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. அஜாய் முகர்ஜியே இருப்பார். துணை முதலமைச்சராக மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. ஜோதிபாசு பதவி வகிப்பார்.

இதற்கான ஒப்பந்தம் நேற்றுக் கூடிய மேற்குவங்காள ஐக்கியமுன்னணி கூட்டத்தில் செய்து கொள்ளப்பட்டது, ஐக்கிய முன்னணியின் சட்டசபைக் கட்சித் தலைவராக திரு. அஜாய் முகர்ஜியும் துணைத்தலைவராக திரு. ஜோதிபாசுவும் ஒரு மனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். இந்த ஐக்கியமுன்னணியில் மொத்தம் 12 கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. மந்திரிசபையில் எந்தக்கட்சிக்கும் எந்தப் பதவி கொடுப்பது என்பது போன்ற விஷயங்களிலும் ஒற்றுறை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதன் மந்திரி பதவிவிஷயத்திலும், முதல் மந்திரியின் பொறுப்பில் இருக்க வேண்டிய இலாகாக்கள் விஷயத்திலும் ஐக்கியமுன்னணியில் பலதரப்பட்ட கருத்துவேறுபாடுகள் இருந்து வந்துள்ளன. ஆனால் அந்தவேறுபாடுகள் இப்பொழுது களையப்பட்டுள்ளன. ஐக்கியமுன்னணிக்கட்சிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள 32 அம்சக்கொள்கைத்திட்டத்தைக் கருத்தில் கொண்டு மக்களுக்கு தமது அரசு சேவைபுரியும் என்று திரு. அஜர்முகர்ஜி அறிவித்துள்ளார்.

இந்த ஐக்கிய முன்னணியில் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சிக்கே அதிக இடங்கள் கிடைத்திருந்த போதிலும் முதன்மந்திரி பதவியை பங்ளாகாங்கிரஸிற்கு அதனை அது விட்டுக்கொடுத்திருக்கின்றது. என்றாலும் உள்துறை அமைச்சின் கீழ்வரும் பொலிஸ் இலாகாவை துணைப்பிரதமரின் பொறுப்பிலேயே விடவேண்டும் என்ற ஒப்பந்தத்தின்பேரிலேயே இந்த ஏற்பாட்டுக்கு அது இணங்கியிருக்கின்றது. முதன்மந்திரி நிதி மற்றும் அபிவிருத்திப்பகுதிகளைத் தமது பொறுப்பில் வைத்திருப்பார்.

40 தீவிரவாதிகள் விடுதலை

தேர்தலின்போது கைது செய்யப்பட்டிருந்த 40தீவிரவாதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதர அரசியல்வாதிகளையும் கைதிகளையும் விடுதலை செய்வதுபற்றி ஆராயப்படுகின்றது.

பிரதான வீதி பழுது

அனலைதீவு, வெள்ளி

அனலைதீவு மக்கள் அதிகமாகப்போக்குவரத்துச்செய்யும் பிரதான வீதி பலகாலமாகத் திருத்தப்படாது பழுதடைந்த நிலையிலிருக்கிறது.

'சிவசேனை' தடைசெய்ய இயக்கத்தை கோரிக்கை

பம்பாயில் சமீபத்தில் சிவசேனை இயக்கத்தினர் நடத்திவரும் கலவரங்களைச் சமாளிக்கஅரசாங்கம் என்ன செய்யப் போகிறதென்பதை உள்துறை அமைச்சர் தெரிவிக்காதது ஏமாற்றமளிப்பதாக உள்ளதென திமுக உறுப்பினர் எஸ். கந்தப்பன் லோகசபையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், சிவசேனை போன்றஸ்தாபனங்களைதடைசெய்ய வேண்டுமெனவும் சிவசேனையைத் தடைசெய்ய தற்போதைய சட்டம் போதாதெனில் சபையிடம் அதிகாரத்தை உள்துறை மந்திரி கோரலாமெனவும், சிவசேனைத் தாக்குதல் குறித்து தமிழ்நாடு மக்கள் கவலையடைந்துள்ளார்கள் எனக் கூறிய திரு. கந்தப்பன் தமிழ்நாட்டில் இதுகாலவரை நடைபெற்ற இயக்கங்களைச்சுட்டிக்காட்டி இவை போன்று சிவசேனைக்கு இதுவரை எதிரான இயக்கங்கள் ஏற்படாவண்ணம் தமிழ்நாடு தடுக்கமுடிந்ததெனவும் இனிமேல் இவ்விடயத்தில் அரசாங்கம் ஒத்துழைக்காமல் இருந்து தொடர்ந்தும் பம்பாயில் சிவசேனை நடவடிக்கைகள் நடக்குமாயின் தமிழ்நாட்டில் பதிலடி இயக்கங்களைத் தடுப்பது பெரும் கஷ்டமாகுமெனவும் கூறினார்

ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் பொதுவாகக் கட்சி வேறுபாடுகளை மறந்து தங்கள் தங்கள் மாநில நன்மையைக் கருதுவதுதான் வழக்கம். ஆனால் தமிழ்நாடு காங்கிரஸ்காரர்கள் தங்கள் மாநிலங்களுக்கு மத்திய அரசு உதவக்கூடாதுதெனப் பேசுகிறார்கள் என்று திரு. கந்தப்பன் தமிழ்நாடு காங்கிரஸ்காரர்கள்பற்றிப்புகார் தெரிவித்தார்.

தீவிபத்தில் 500 குடும்பங்கள் வீடிழந்தன

கௌஹாட்டி, பெப். 21

காரோமலை தலைநகரான துராவிலிருந்து 12 மைல்களுக்கப்பாலுள்ள காரோபந்தாவில் ஏற்பட்ட ஒரு தீவிபத்தினால் சுமார் 500 குடும்பங்கள் வீடிழந்தன. இத் தீவிபத்தினால் பொலிஸ் நிலையம், தபால் ஆபீஸ், ராஜ்ய பொதுப்பணித்துறைக் காரியாலயம் முதலியவற்றின் கட்டிடங்களும் நாசமடைந்தன. இதனால் ரூ. 10 லட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் சேதமடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் எழுத்துக்கள் மறைக்கப்பட்டனவாம

யாழ்ப்பாணம், சனி

கீரிமலை தீர்த்தக்கேணியின் அடுகில் பொறிக்கப்பட்டிருந்த தமிழ் எழுத்துக்கள் மறைக்கப்பட்டிருப்பதாகவும், அவ்வெழுத்துகள் பொறிக்கப்பட நடவடிக்கை எடுக்கும்படியும் கிரிமலை மக்கள் உள்ளூராட்சிஅமைச்சரைக்கோரியுள்ளார்கள். (ந. நி.)

அனுமதித்தவர் யார்?

சடலம் சவச்சாலையில் கிடக்கிறது

யாழ்ப்பாணம், சனி

இறந்தவரின் சடலத்தை எடுத்துச்செல்ல யாருமில்லையாம் இறந்தவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகத் தெரிவிக்கப்பட்டவரே அந்தச் சடலத்தை தன்னால் எடுத்துச் செல்ல முடியாதென தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிப் பொலிசாடுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளதால் சடலம் அனாதவரான நிலையில் ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஏற்புவலியெனக் காரணம் காட்டி கிள்நொச்சி ஆஸ்பத்திரியில் இம் மாதம் 17ம் திகதி அனுமதிக்கப்பட்ட இராசலிங்கம் என்றவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டு சிறிது நேரத்தில் மரணமானார்.

மரணமானவரைசிளிநொச்சியில் அனுமதித்தவரென வைத்திய டிக்கட்டில்தெரிவிக்கப்பட்டிருந்தவரின் விலாசத்துக்கு இவ் விஷயத்தை பொலிசார் தெரிவித்தபோது மரணமானவர் தன்னைவிட்டு விலகி 8 வருடங்களாகிவிட்டதாகவும் தனக்கும் சடலத்துக்கும் தொடர்பு எதுவுமில்லையென்றும் அவர் பொலிசாடுக்கு அறிவித்துள்ளார்.

மரணமானவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்தவர் யார் என்ற எந்த விபரமுமே தெரியாததால் சடலம் ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. [கா. நி]

அண்ணாவுக்கு மைசூர் சட்டசபை அஞ்சலி

மைசூர், பெப். 21

மைசூர் சட்டசபையில் இன்று தமிழக முதலமைச்சர் திரு. சி, என். அண்ணாதுரையின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின் சட்டசபை நடவடிக்கைகள் ஒத்திப்போடப்பட்டன.

அஸ்ஸாம் சட்டசபை

ஸில்லாங், பெப், 21

அஸ்ஸாம் சட்டசபையில் மறைந்த தமிழக முதலமைச்சர் அண்ணாதுரைக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. அண்ணா சிறந்த எழுத்தாளர், சிறந்த ராஜதந்திரி, பெரிய தலைவர்களில் ஒருவர் என்று அஸ்ஸாம் சபாநாயகர் திரு. மோகிகாந்ததாஸ், அமைச்சர் திரு. மோகிந்திர மோகன், சௌதுரி, எதிர்க்கட்சித் தலைவர் திரு. கௌரிசங்கர் பட்டாச்சாரி மற்றும் பலரும் பாராட்டினார்கள். அங்கத்தவர்கள் இரு நிமிடம் எழுந்து நின்று மௌனம் அனுஷ்டித்தனர்.

தவறுதலாக நஞ்சை குடித்தார்

யாழ்ப்பாணம், சனி

நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் தவறுதலாக நச்சுத் திராவகம் அருந்தியதால் மரணமான சம்பவம் கோண்டாவிலில் நேற்று நடைபெற்றது.

மரணமான ரி. சுந்தரலிங்கம் என்பவரின் மரணம் பற்றி திரு. என். இராசநாயகம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணவிசாரணை நடத்தினார். தவறுதலாக நடைபெற்றதால் ஏற்பட்ட விபத்து மரணம் எனதீர்ப்பு வழங்கப்பட்டது. (கா. நி.)

வீதிவேலை பூர்த்தியாகிறது

யாழ்ப்பாணம், சனி

யூநகரி-பல்லவராயன்கட்டு கிராம சபையிலுள்ள 6மைல் நீளமானவீதிஒன்றுக்கு ரூபா 10,000 ஒதுக்கப்பட்டு, வீதியின் ஒருபகுதி வேலை முடிவுறும் தறுவாயிலுள்ளது.

இந்த வீதியைமுற்றாக மூடுவதற்கு இன்னும் 20,000 ரூபா ஒதுக்கும்படி பல்லவராயன்கட்டு கிராமசபைத் தலைவர் திரு. இரத்தினம் உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாசாவுக்கும், கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினத்திற்கும் ஒரு மகஜர் அனுப்பிவைத்துள்ளார். (ந. நி.)

புகார்

யாழ்ப்பாணம், சனி

இரவு 12 மணிக்குப்பின் சில மாணவர்கள் வீதிகளில் தகாத வார்த்தையைப் பிரயோகித்து சத்தமிடுகிறார்களாம்.

தினமும் யாழ்.நகரில் இவ்விதம் நடைபெற்றுவருதாக புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ந. நி.

யாழ்ப்பாணம், சனி

திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரிச்சந்திக்குஅருகாமையில் திருநெல்வேலி கலைக்கோவில் ஆதரவில் இம்மாதம் 23-ந் திகதி மாலை அண்ணா அனுதாபக் கூட்டம் நடைபெறவிருக்கின்றது. திருமதி மதியாபரணம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் இலங்கை திராவிடமுன்னேற்றக்கழக முக்கிய பிரமுகரான திரு. மணவைத் தம்பி, டாக்டர் நாகநாதன் எம்.பி. திரு. அ.அமிர்தலிங்கம் எம். பி., திரு. வி. என். நவரத்தினம் எம். பி., கவிஞர் வேல் ஆனந்தன், திரு. ஆ. துரைராஜசிங்கம், திரு. தேவன் உட்பட பலர் சொற்பொழிவாற்றுவர்.

கலைக்குழு உறுப்பினர்

ஊர்காவற்றுறை, வெள்ளி

புங்குடுதீவு-கிழக்கு இளந்தமிழர்கலைக்குழு அமைப்புக் கூட்டம் கிராம சபை அங்கத்தவர் திரு. மா. க. வைத்தியநாதன் தலைமையில் நடைபெற்றபோது பின்வருபவர்கள் கலைக்குழு நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. மா. க வைத்தியநாதன் (கி. ச. அங்கத்தவர்), உபதலைவர்: திரு. கு கனகலிங்கம், காரியதரிசி: திரு. சி. மகேஸ்வரன், துணைக் காரியதரிசி: திரு. சி. சண்முகலிங்கம், தனாதிகாரி: திரு. வை. வைத்தீஸ்வரன்.

பாரதி ச. ச. நிலைய உறுப்பினர்

அளவெட்டி, வெள்ளி

யாழ். பாரதி சனசமூக நிலைய வருடாந்தக் கூட்டம் திரு. பி. யோசெப் தலைமையில் நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் அறிஞர் அண்ணாவின் மறைவுக்கு 3 நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

புதுவருட நிர்வாகிகள் தெரிவில், பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வ. ஆபிரகாம், காரியதரிசி: வே. சிலுவைராசா, தனாதிகாரி: க. ஜனதாஸ், பரிசோதகர்: அ. ராஜ். நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

பிரயாண சேவை

அனலைதீவு, வெள்ளி

புளியந்தீவு - இறுப்பிட்டி பிரயாண சேவை இன்று முதல் ஆரம்பமாகியது. இச்சேவையை தீவுப்பகுதி மோட்டர்வள்ள ஐக்கிய சங்கம் நடத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

தூய்மை இல்லாத உள்ளத்தை உண்ணாவிரதத்தால் தூய்மைப்படுத்த முடியாது. உணவை மாற்றுவதால் அந்த உள்ளத்தில் எந்த விளைவும் இடுக்காது.

—மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், கிலக வருஷம் மாசிமாதம் 11-ந் திகதி
(22 - 2 - 69)

'சிவசேனை'யின் கொடுமை

'சிவசேனை' என்ற பெயரைக் கேட்டதும், சிலருக்குத் தப்பெண்ணங்கள் ஏற்படலாம். சிவபெருமானை தலைவராகக்கொண்டு, சைவ சமயத்தை வளர்ப்பதற்காக சைவ அதாவது அன்பு வழியில் தொண்டு செய்யும் படையினரோ என்று நினைக்கக்கூடும். ஆனால் பம்பாயிலே அமைக்கப்பட்டுள்ள 'சிவசேனை' சமீபத்தில் அந்நகரில் விளைவித்த பலாத்கார செயல்களையும் அதனால் ஏற்பட்ட சேதங்களையும் அறியும்போது, அந்தப் படையினருக்கு 'சிவசேனை' என்று பெயர் வைத்ததே சைவ சமயத்துக்கு அவமதிப்பாகுமென்பதையும், அந்த சேனையை நீடித்து இருக்க அனுமதிப்பது நாட்டின் அமைதிக்கும் ஒற்றுமைக்கும் பெரும் ஆபத்தாகுமென்பதையும் உணரலாம்.

புதுடில்லி லோக்சபாவில் உள்நாட்டமைச்சர் சவான் இக் கலவரத்தில் ஏற்பட்ட சேதங்களைப் பற்றிய விவரங்களைக் கூறிவிட்டு, மகாராஷ்டிர அரசாங்கம், இவ்வளவு விபரீத விளைவுகள் ஏற்படுமென்பதை எதிர்பார்க்கவில்லை என்றும், இது அவர்களது தவறுதான் என்றும் ஒப்புக்கொண்டுவிட்டு, சிவசேனையைத் தடைசெய்ய வேண்டுமென்ற யோசனையைத் தாம் ஒப்புக்கொள்ள முடியாதென்றும், அதற்குச் சில சட்டத் தடைகள் இருப்பதாயும் தெரிவித்தார்.

சட்டத் தடைகள் ஏதும் இருப்பின், அத் தடைகளை நீக்கி, தகுந்த சட்டதிட்டங்களை பொதுமக்களின் நன்மைக்காக நிறைவேற்ற வேண்டியது இந்திய அரசாங்கத்தின் மேலாய கடமையாகாதா?

மகாராஷ்டிர - மைசூர் எல்லைப் பிரச்னைக்கும் பம்பாயிலுள்ள தமிழருக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. அப்படி இருக்கையில் எல்லைத் தகராறைப் பற்றி கிளப்பிய இந்தக் கலவரங்களை முதலியனநடத்தக் கூடாதா? அப்படியானால் தமிழகத்திலும், முதல்வர் கருணாநிதி எச்சரித்ததுபோல் பிற ராஜ்யத்தினர் நிம்மதியாக வசிக்கமுடியுமா? இதனால் நாட்டுக்கே எவ்வளவு விபரீதங்கள் விளையுமென்பதை விளக்கத்தேவையில்லை. பம்பாயில் தமிழருக்கு மாறாக இவ்வளவு கொடுமைகள் நடந்தும் தமிழக மக்கள் இன்னும் பொறுமைகாட்டி அமைதியாக இருப்பது பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

பலாத்கார, பயங்கர முறைகளை நக்ஸல்பாரி கம்யூனிஸ்டுகள் கையாளுவதாகவும் ஆகவே அவர்கள் சேனை கலவரங்களைப்பற்றி கண்டிக்கத் தகுதியற்றவரென்றும் சபையில் வாதிக்கப்பட்டது. பலாத்காரமுறைகளை யார் உபயோகித்தாலும் அது ஜனநாயகத்தைக் குட்டிச்சுவராக்குவதுடன், பொதுமக்களுக்குப் பெரும் இம்சையாக முடியும். ஆகவே பலாத்காரமுறைகளைப் பகிரங்கமாகக் கையாளும் ஸ்தாபனங்களை அனுமதிப்பது எவ்விதம் சரியாகும்?

ஐம்பத்தைந்து கோடி மக்களடங்கிய பெரிநாட்டை அமைதியாக நடத்திச்செல்வது மிகப் பெரிய பொறுப்பு. இந்த சிரம சாத்தியமான பளுவை பிரதமர் இந்திரா காந்தி இவ்வளவுகாலம் சமாளித்து வருவது ஆச்சரியமே. என்றாலும் பிற கட்சிகளின் ஒத்துழைப்பு தமக்குத் தேவையென்று லோக்சபையில் அவர் வேண்டுகோள் விடுத்தார். "நாங்கள் சொல்லும் யோசனைகளைக் கேளாவிடில் நாங்கள் எப்படி ஒத்துழைப்பது?" என்று திருப்பிக் கேட்டுள்ளார் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு தலைவர். இந்த பலாத்கார சம்பவங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் மக்களிடையேயுள்ள பொருளாதார சங்கடங்களேயாகும். அவ்வித பொருளாதார பிரச்னைகளைக் தீர்ப்பது மக்

அயூப் அடுத்து என்ன செய்யப்போகிறார்?

அயூப்கான் அடுத்து என்ன செய்யப்போகிறார் என்பது பாகிஸ்தானில் பொதுமக்கள் மத்தியில் இப்பொழுது எழுந்துள்ள ஒரு பெரும் கேள்வியாகும். ஆனால் அங்குள்ள எதிர்க்கட்சிகளின் அடுத்த நடவடிக்கை என்னவென்பது தான் அதிபர் அயூப்கானின் முன்எழுந்துநிற்கும் பெரிய கேள்வியாகவிருக்கும் அதே வேளையில் "அயூப்கானுக்குப் பிறகுஎன்ன நடக்கும்?" என்ற கேள்வி கேள் பாகிஸ்தானில் சமீப காலமாக நடைபெற்று வரும் சம்பவங்களை அவதானித்துவரும் வெளிநாட்டு நேயர்கள் மத்தியில் எழுந்துள்ளது. அதிகாரத்தின் கடிவாளத்தை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு இறுமாப்போடுபதவியில் அமர்ந்திருந்த அதிபர் அயூப்கான் இப்பொழுது கட்டம் கட்டமாக இறங்கிவந்தும் கொண்டிருக்கின்றார். இறக்கம் முழுசரணாகதியாக இருக்குமா அல்லது மீண்டும்வேதாளம் முருக்கை மரத்தில் ஏறியகதையாக முடியுமா என்பதை இன்னும் சிலவாரங்களில் அறிந்துகொள்ளக் கூடியதாய் இருக்கும்.

அரசியல் கைதிகள் விடுதலையாகியுள்ளனர். நெருக்கடி நிலைமை விலக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு சட்டத்தின்கீழ் அரசியல் வாதிகள் கைதுசெய்யப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. கடைசியில் எதிரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவும் அயூப்கான் சம்மதம் தெரிவித்து அவர்களுக்கு அழைப்பும் விடுத்துள்ளார். இந்த அழைப்புகளை முதலில் ஏற்றுக்கொண்ட ஜனநாயக செயல்கமிட்டி பின்னர் தனது முடிவை மாற்றிக்கொண்டு தமது சார்பில் ஒரேயொரு பிரதிநிதி மட்டும் கலந்துகொள்வார் என்று அறிவித்துள்ளது. எட்டு எதிர்க்கட்சிகளின் கூட்டுக்கமிட்டியான இந்த ஜனநாயக செயல்கமிட்டி [illegible] தேசிய சபையில் சேரி[illegible]

இந்தநிலைமையில் அயூப்கானின் நிலைமை தர்மசங்கடமாகியுள்ளது என்பது கண்கூடு.

நாட்டின் தற்போதைய அரசியல் திட்டத்தில் மாற்றங்கள் செய்வதுபற்றி ஆலோசிப்பதற்காகவே எதிர்க்கட்சித் தலைவர்களை ஜெனரல் அயூப்கான் அழைத்திருந்தார். ஆனால் இந்தப்பேச்சுக்களுக்கே இடமில்லையென்றும் அரசாங்கத்தை மாற்றி அமைக்கும் பொறுப்பை மக்களிடம் விடும்வகையில் பொதுத் தேர்தல் இடம்பெறவேண்டும் என்றும் சில தலைவர்கள் கருதுவதாகத்தெரிகின்றது.

ஆரம்பத்தில் எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கைகளை அயூப்கான் ஏற்றுக்கொண்டு சலுகைகள் அளித்துவிட்டு மீண்டும் அவைகளைப் புறக்கணிப்பதனால் மக்கள் மத்தியில் மேலும் செல்வாக்கை இழப்பதுடன் வெளிநாட்டில் மதிப்பைக்குறைத்துக்கொள்ளவதாகு . என்றாலும் எதிர்க்கட்சிகள் தமது அரசியல் கோரிக்கைகளை இப்பொழுது துரிதமாக வற்புறுத்தக்கூடிய நிலையில் இருக்கின்றன. வாக்குரிமை, சமஷ்டி அரசியல் அமைப்பு, குடியுரிமைகள் போன்ற தமது அடிப்படை உரிமைகளை [illegible] இப்பொழுது வற்புறுத்தக் கூடும். இவைகளுக்கு அயூப்கான் இணங்கப்போகின்றாரா அல்லது ராணுவ பலத்தைக்கொண்டு மீண்டும் தமது அதிகாரப்பதவியில் இறுக்கமாக அமர்ந்துகொள்ளப்போகிறாரோ என்பது இனிமேல்தான் தெரிய வேண்டும்.

—பேனா

பாகிஸ்தான் நெருக்கடி .. ஒரு கண்ணோட்டம்

"விரைவில் சிரடையும்"

ப. ச. தலைவர் உறுதி

[illegible]

சகோதரத்துவ அடிப்படையில் வளர்ந்தது சரண இயக்கம்

- சி. கந்தரமூத்தி -
உதவி சாரண ஆணையாளர், யாழ்ப்பாணம்)

காலத்துக்குக் காலம் உலகில் பல பெரியோர்கள் தோன்றுகிறார்கள். கல்விமான்கள் தோன்றுகின்றார்கள், அரசியல் தலைவர்கள் தோன்றுகிறார்கள், விஞ்ஞானிகள் தோன்றுகின்றார்கள் இவர்களில் சிலர் தம்வாழ்நாளில் பல மாற்றங்கள் செய்துள்ளனர். சிலர் புதுப் புது உண்மைகளைக்கண்டறிந்துள்ளனர், வேறுசிலர் புதுப் புதுதிட்டங்களை உருவாக்கியுள்ளனர். இத்தகைய பெரியோர்கள், கல்விமான்கள், அரசியல்தலைவர்கள், விஞ்ஞானிகள் எல்லோரும் உலகில் அழிவின்றி வாழ்கின்றார்களா இல்லை. அநேகர் தாம் கண்டறிந்து புதுப் புது உண்மைகளையும் உருவாக்கிய புதுப்புதுத் திட்டங்களையும், ஸ்தாபித்த புதுப் புது இயக்கங்களையும் எம்முன் விட்டுமறைந்து விட்டனர். இத்தகையோரில்தலை சிறிந்த ஸ்தாபகர் சேர் ரொபெட்பேதன்பவல் அவர்களாவர். தந்தை பேதன் பவல் உலகப் பெரியார்களுள் ஒருவர் இவர் உயர்ந்த மதிப்புடையவர். இவருடைய முயற்சியினாலேயே சாரணீயம் பிறந்தது.

சமுதாயமாக வாழப் பிறந்தவன் மனிதன். பிறருக்காக வாழ்வதே வாழ்க்கை மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை ஆகவே பிறருக் உதவி புரிவதற்குப் பயின்று கொள்ளுதல் வேண்டும். இதுமனிதனை சீரியனாக்கி விடும். அந்நோக்கை இலக்காகக் கொண்டே சாரண இயக்கம் தோன்றியது. எனவே இவ்வியக்கத்திற்குவித்திட்டதந்தைபேடன்பவல் அவர்களை நாம் [illegible] வரும் நினைவு கூறுதல் சாலச்சிறந்ததே.

சாரண இயக்கம். 1907ம் அண்டு சேரொபட்பேடன் பவல் என்னும் ஆங்கிலேய இராணுவத் தளபதியால் ஆபிரிக்காவில் முதன் [illegible] என்பது சாரணியத்தைப் பொறுத்த வரையில் உண்மையாக இருக்கின்றது. அதாவது சிறு விதையிலிருந்துதான் பெரிய ஆலவிருட்சம் பரந்து வளர்கின்றது. அவ்வாறு வளர்ந்து பலலாயிரக்கணக்கான மக்களுக்கு நிழல் தருகின்றது. "மேபேக் சிங்கை" முற்றுக்கையிட்டிருந்த காலத்தில் சிறுவர்களது மறைந்திருந்த ஆற்றல்களை பேதன் பவல் கண்டுபிடித்தார் அவர் இங்கிலாந்திற்குத் திரும்பியபோது இளைஞர் இயக்கம் பற்றிய எண்ணம் கருக்கொண்டது. அது சாரணியத்தின் அத்திபாரத்தில் உருப்பெற்று பயிற்சி பெற ஊக்கமளித்தது. சிறுவர்களது இயற்கை விருப்பங்களாகியவிளையாட்டுகள் புதுப் புதுக் கண்டுபிடிப்புகள்மனோரம்பிய வாழ்க்கை, நுண்பணி என்பவற்றிற்குப் பூரண சந்தர்ப்பம் அளிக்கும் என்றவரது எண்ணக்கருநாளொடு மேனியும் பொழுதொடு வண்ணமுமாக வளர்ந்து வந்தது.

சாதி, சமய, நிற, பாஷை பேறுபாடின்றி உலகசகோதரத்துவ அடிப்படையில் இயங்கும் சாரணியத்தின் அத்திபாரமாய் நிற்பதே முச்சத்தியப் பிரமாணங்களும், பத்துச் சாரண நீதிகளுமாகும்.

அரசியல் நெடுக்கடியுத்த பீதியும் நிறைந்த இவ்வுலகத்தின் பல பகுதிகளிலும் இந்தச் சகோதர ஆன்மீக சக்திதான் 74க்கு மேற்பட்ட நாடுகளில் வாழும் சிறுவர்களை ஒன்றாக இணைத்து சர்வதேச நேர்மையை வளர்த்திருக்கின்றது. சமாதானத்தை வளர்த்து, நாடுகளிடையே நல்லெண்ணத்தைப் பெருக்கி, யுத்தத்தை ஒழிக்கும் நோக்கங்களுடன் எழுந்த ஐக்கிய நாடுகள் சங்கமும் அரசியல் அடிப்

அண்ணா குடும்பத்தினரின் நன்றி

சென்னை, பெப்.21

அறிஞர் அண்ணாதுரையின் மறைவு குறித்துத் துக்கம் தெரிவித்த இந்தியாவின் சகல அரசியல் தலைவர்களுக்கும் உலகில் பல்வேறு பகுதிகளிலுமுள்ள தமிழ் மக்கள் வைத்தியப் பகுதியினர் ஆகியோருக்கும் மற்றும் பல அரசாங்கங்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும் அண்ணாவின் மனைவி திருமதி ராணி அண்ணாதுரையும் அவரது வளர்ப்புப் பிள்ளைகளும் நன்றி தெரிவித்து அறிக்கையொன்று வெளியிட்டுள்ளனர். அவர்கள் தங்கள் அறிக்கையில் "எங்களை மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டுப் பிரிந்த எங்கள் தெய்வத்திற்கு எங்கள் அஞ்சலி. தேம்பி அழுத எங்களுக்கு தேறுதல் தொன்னோர் பலர். தேறுதல் சொல்ல பல இலட்சம் பேர் இருக்கிறார்கள் என்ற நினைப்பிலேயே எங்களைத் தேற்ற முயற்சிக்கிறோம்" என அறிவித்துள்ளார்கள்.

—

அவகாசம்

யாழ்ப்பாணம், சனி

அரசாங்கம் சுவீகரித்த பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்கள், உத்தியோக மொழித் தேர்ச்சி பெற 1972-ம் அண்டு மாசிமாதம் வரை அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது,

இலங்கை சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியரல்லாத ஊழியர் சங்கத்தின் வடபிரதேசக் கிளையின் தூதுகோஷ்டியொன்று கல்வி, நிதி அமைச்சுக்களின் உயர்தர அதிகாரிகளைப் பேட்டிகண்டதன் பயனாக அரசாங்கம் இம்முடிவை மேற்கொண்டுள்ளது

சங்கத்தலைவர் திரு. இரத்தினசிங்கம், செயலாளர் திரு. கே, ஏ. இரத்தினம், திரு. கே. நடராசா திரு. ஏ. சண்முகம், திரு. கே. மாணிக்கவாசகர் ஆகி

ஐயாறன் எழுதுகிறான்

கலைஞர் கருணாநிதி,
முதல் அமைச்சர்,
தமிழ் நாடு.

முதல்வரே,
வணக்கம், வாழ்த்துக்கள்.

கொழும்பு பத்திரிகையொன்று, தங்கள் தலைமையைப்பற்றியும், தி. மு. க. வைக் குறித்தும் அச்சம் தெரிவித்து, இலங்கைக்குத் தாங்கள் உறுதிமொழி யளிக்கவேண்டுமென்று கடுத்துப்பட ஒரு தலையங்கம் எழுதியிருந்தது.

இதை அறிந்ததும் தாங்கள் சற்றும் தயங்காமல், திருவாரூரில் வைத்து ஓர் உறுதி மொழி அளித்ததற்காக நன்றி.

ஆனால் சென்னை "இந்து" பத்திரிகையில் இதுபற்றிய செய்தித் தலைப்பைக் கண்டதும் எனக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. இலங்கையிலுள்ள தி. மு. க. எவ்வித பிரச்னையையும் கிளப்பாது" எனவே இலங்கை அரசாங்கம் எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை என்றும் தாங்கள் கூறியுள்ளதாக அச்செய்தி தெரிவிக்கிறது.

அந்தச் செய்தி சரிதானா? அல்லது தமிழில் தாங்கள் பேசியதை மொழிபெயர்த்ததில் ஏதும் தவறா? ஏன் இப்படிக் கேட்கிறேனென்பது தங்களுக்கும் தெரிந்திருக்கும். இலங்கையிலுள்ள எந்தக் கட்சியினரும் சரியாக நடந்துகொள்வரென்றும் அதைப் பற்றி இலங்கை அரசாங்கம் சந்தேகம்கொள்ள வேண்டாமென்றும் தாங்கள் உறுதிமொழி அளிப்பதாயின், அதன் மீது சந்தேகம் இன்னும் அதிகரிப்பதாக இருக்கலாம். இலங்கையிலுள்ள தி. மு. க. தங்கள் ஆதிக்கத்திலும் தலைமையிலும் நடப்பதாக தப்பெண்ணம் ஏற்படக் கூடுமல்லவா? நம் வீட்டுப் பையனைப்பற்றி, பக்கத்து வீட்டுக்காரர் உத்தரவாதம் அளிப்பதாயின் அதன் அர்த்தமென்ன?

அமரர் அண்ணாதுரை ஆட்சிக்கு வந்தபோதும், இலங்கையில் சிலர் இவ்விதப் பூச்சாண்டியைக் கிளப்பிவிட்டனர் அவர் உடனே தெளிவான ஆணித்தரமான விளக்கமும் மறுப்பும் கொடுத்தார். இலங்கையிலுள்ள தி. மு. க. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகாதா?

மகாராஷ்டிர - மைசூர் எல்லைப் பிரச்னைக்கும் பம்பாயிலுள்ள தமிழருக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. அப்படி இருக்கையில் எல்லைத் தகராறைப் பற்றி கிளப்பிய இந்தக் கலவரத்தில் பம்பாயிலுள்ள தமிழரின் விடுகளையும், கடைகளையும் ஏன் குறி வைத்துத் தாக்க வேண்டும். இந்த வெறிச் செயல்களுக்கு அடியிலே ஒரு திட்டம் இருப்பதை அமைச்சர் சவாணும் மறுக்க முடியாது. பம்பாயிலோ அல்லது இந்தியாவின் வேறு மாகாணங்களிலோ தமிழர் அமைதியாக மற்றவர்களைப் போல் வசித்து வியாபாரம் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு தலைவர். இந்த பலாத்கார சம்பவங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் மக்களிடையேயுள்ள பொருளாதார சங்கடங்களேயாகும். அவ்வித பொருளாதார பிரச்னைகளைத் தீர்ப்பது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளின் பொறுப்பும் கடமையுமாகும். பிரதமர் இந்திராவுடன் தேசிய அரசாங்கத்தை அமைக்க முடியாவிடினும் பலாத்கார இயக்கங்களை அடக்குவதில் அவர் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெற எல்லா முயற்சிகளையும் செய்தல் அவசியம்.

புற்றுநோயாளருக்கு உதவி

புற்றுநோயால் பீடிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற்றாலும் உழைத்து வாழக்கூடியநிலையிலிருக்க மாட்டார்களென்றும் அவர்கள் இறக்கும்வரை யாவது அவர்கள் விரும்பிய உணவை உண்பதற்கு இந்தக் கொடிய நோயிலிருந்து தப்பியிருக்கும் அதிர்ஷ்டம் பெற்ற வசதிபடைத்த மக்கள் தாராளமனதுடன் உதவிபுரியவேண்டுமென்று யாழ்ப்பாண மாவட்ட புற்றுநோய் தடுப்புச் சங்கத் தலைவர் டாக்டர் கே. கனகரத்தினம் உருக்கமானவேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

புற்றுநோய் கொடிய வியாதி. அந்த நோயால் பீடிக்கப்பட்டவர்கள் உயிர்தப்பியது அருமை. கதிர்ஞர் அண்ணாவின் உயிரைப் பலிவாங்கியதும் இந்தப் புற்றுநோய் தான். புற்றுநோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு கதிரியக்கசிகிச்சை நிலையம் இலங்கையில் மகாரகமையில் தான் இருக்கிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் புற்றுநோயாளர் தொகை அதிகரித்துவருகிறது. மகாரகமைக்குச் சென்று பலவித தொல்லைகளுக்கிடையிலும் கிகிச்சை பெறுவதற்குப் பதிலாக வீட்டிலிருந்து சாவது மேலென இங்குள்ள பலர் கருதுகிறார்கள் என்றாலும் மகாரகமையில் புற்றுநோய் சிகிச்சை பெறுவர்கள் பெரும்பாலும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் புற்றுநோயாளர்பகுதி ஒன்றை ஸ்தாபிக்கவும் கதிரியக்க சிகிச்சைக் கருவியொன்றை இங்கு பொருத்தவும் பல வருடங்களாக இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தும், அமைச்சர் ஒருவர் உறுதியளித்தும் இன்னும் எதுவும் செயல்படவில்லை. இனியாவது அரசாங்கம் இது பற்றிச் சிந்திக்கவேண்டும்

இதேசமயம் அண்ணாவின் நினைவாக சிலவைக்கவும் மற்றும் நினைவுச்சின்னங்கள் நிறுவவும் ஆலோசனை செய்யும் மன்றங்களும் நிறுவனங்களும் அண்ணாவின் நினைவாக, புற்றுநோயால் பீடிக்கப்பட்டுள்ள துர்ப்பாக்கிய மக்களுக்கு அவர்களது கடைசி ஆசைகளை நிறைவேற்றவும், நிதிதிரட்டி இங்கு ஒரு புற்றுநோய் சிகிச்சை கதிரியக்கக் கருவியைத் தருவிக்கவும் முன்வந்தால் அதைவிட அண்ணாவுக்குப் பொருத்தமான நினைவுச்சின்னம் இருக்கமுடியாது.

காட்டுமிராண்டித் தனம்

இஸ்ரேலிலும் ஈராக்கிலும் நடைபெற்றுவரும் சம்பவங்கள் மனிதன் மீண்டும் காட்டுமிராண்டி வாழ்க்கைக் காலத்துக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறானு என்ற கேள்வியை எழுப்புவதாகஉள்ளது, பழிக்குப் பழிவாங்கும் வஞ்சம் தீர்க்கும் மனப்பான்மை எந்தப் பிரச்னையையும் மேலும் மேலும் சிக்கலாக்கி அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு கேடு செய்யுமேயொழிய யாருக்கும் நன்மை செய்யாது; எந்தப் பிரச்னைக்கும் தீர்வு கிடைக்காது.

இஸ்ரேலியருக்கு உளவு பார்த்ததாக ஒன்பது யூதர்கள் உட்பட பதினான்குபேர் மீது ஈராக் இராணுவ நீதிமன்றம் மரணதண்டனை விதித்ததும் அவர்கள் பகிரங்கமாகத் தூக்கிலிடப்பட்டனர். இதற்குப் பதிலாக இஸ்ரேலிய நீதிமன்றம் பதினான்கு அராபியர் மீது மரணதண்டனை விதிக்க அவர்கள் உயிருடன் புதைக்கப்பட்டார்களாம். சென்ற வருடம் நவம்பரில் கிரிசின் தலைநகர் ஏதென்சில் இஸ்ரேல் விமானமொன்றை அரபு ஆதரவு 'கமாண்டோ' என்னும் ஓர் இயக்கத்தினர் தாக்கினர். இதற்குப் பதிலாக லெபனான் தலைநகர விமான நிலையத்தில் பல விமானங்களை இஸ்ரேலியர் தாக்கிச் சேதப்படுத்தினர். இப்பொழுது சுவிட்சர்லாந்தில் சூரிச் விமான நிலையத்தில் இஸ்ரேல் 'போயிங்' விமானமொன்றை அரபு 'கமாண்டோக்கள்' எதிர்பாராத விதமாகத் தாக்கி விமானிகளுக்கும் சில பிரயாணிகளுக்கும் காயம் ஏற்படுத்தினர். இச் சம்பவங்கள் பற்றி உலக நாடுகள் கவலையும் கண்டனமும் தெரிவித்துள்ளன.

சூரிச் சம்பவத்துக்கு இஸ்ரேல் பதில் நடவடிக்கை எடுக்குமென எச்சரித்துள்ளது. பதில் நடவடிக்கைக்கு அஞ்சோம் என்கின்றன அரபு நாடுகள் இதன் முடிவென்ன?

மேற்காசிய நெருக்கடி தீருவதற்குப் பதில் மேலும் சிக்கலாவதுடன் இப் பிரச்னைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கு வல்லரசுகளின் ஒத்துழைப்பில்லாததால் அந்தப் பொறுப்பையே விட்டுவிட நினைக்கும் டாக்டர் ஜாரிங்கின் சமரச முயற்சியும் கைவிடப்படலாம்.

இஸ்ரேலை அழித்துவிட வேண்டுமென்ற அரபு நாடுகளின் முயற்சியோ' அரபு நாடுகளுடன் பகைமையைவளர்த்துக்கொள்ளும் இஸ்ரேலியரின் நடவடிக்கைகளோ இருதரப்பினருக்கு மட்டுமல்ல உலக அமைதிக்கே தீங்காக முடியும். இருதரப்பினரும் மூன்றாவதுதரப்பினரின் தொடர்பில்லாமல் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி ஒருநல்ல தீர்வுக்கு வரர்விடில் எல்லோருக்குமே தீமைதான்.

சீரடையும்''

ப. ச. தலைவர் உறுதி

தெல்லிப்பழை, சனி

[illegible]டினசபையில் சேரி ஒழிப்புத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகள் சீர்கேடடைந்திருக்கின்றன. இப்பகுதியில் உள்ள வீதிகள், ஒழுங்கைகள் போக்குவரத்துச் செய்ய முடியாமல் இருக்கின்றன. மழைகாலம் வந்தால் பிரயாணம் செய்வது மிகவும் கஷ்டம். ஒழுங்கைகளில் சேறும், சகதியும் நிரம்பி சுகாதார நிலைமையைப் பாதிக்கிறது. இவற்றை பட்டினசபைத் தலைவர் விரைவில் நிவர்த்தி செய்து தடுமாறு கேட்டுக் காள்கின்றேன்.'' சுன்னாகம் தெற்கு காந்திரூபன் சனசமூகநிலையத்தினர் சுன்னாகம் பட்டினசபைத் தலைவர் திரு. நாகலிங்கத்திற்கு அளித்த வரவேற்பில் நிலையத் தலைவர் திரு. எம். பொன்னுத்துரை கூறினார்.

பட்டினசபைத் தலைவர் தமது உரையில் இப்பகுதி மக்கள் வசிக்கும் வட்டாரச் சீர்கேடுகளை விரைவில் நிவர்த்தி செய்வதாகக் கூறினார். சனசமூக நிலைய நிர்வாகிகளுடன் இரண்டாம் வட்டார அங்கத்தவர், பட்டினசபைத் தலைவர், வட்டாரத்தில் உள்ள குறைபாடுகளை நேரில் சென்று பார்வையிட்டனர்.

மின்சார இலாகாமீது உடுப்பிட்டி கி. ச. கண்டனம்

உடுப்பிட்டி, வெள்ளி

உடுப்பிட்டிக்கிராம சபை மின்சார இலாகாமீதுபலத்த கண்டனம் தெரிவித்துள்ளது. மின்சார விநியோகத்தில் மின்சாரஇலாகா கிராம சபையை ஏமாற்றிவிட்டதாம். சென்ற வியாழக்கிழமை நடைபெற்ற உடுப்பிட்டிக்கிராமசபையின் மாதாந்தக்கூட்டத்தில் இது தெரிவிக்கப்பட்டது.

கரணவாய் தெற்கு மின்சார விநியோகமே இப் பிரச்னையைக் கிளப்பியுள்ளது. அரசாங்கம்கரணவாய் தெற்குக்கு மின்சாரம் விநியோகம்செய்ய உடுப்பிட்டிக் கிராமசபையிடம் அனுமதி கோரி இருந்தது. உடுப்பிட்டிக் கிராமசபையும் கரணவாய் தெற்குக்கு மட்டுமே மின்சாரம் வழங்கலாம் என நிபந்தனையுடன் அனுமதி அளித்தது.

ஆனால் கரணவாய் தெற்கில் பிரதான வீதிகளில் மட்டும் மின்சாரம் விநியோகிக்கப்பட்டதோடு கரணவாய் வடக்குப்பகுதியிலும் மின்சார விநியோகம் பரவலாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலைக் கிராமசபையின் 20-வட்டார உறுப்பினர் திரு. இ, இராஜதுரை தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். இதனைத் தொடர்ந்து கிராமசபைத் தலைவர் திரு. ஆர். ஆ. தர்மரத்தினம் மின்சார இலாகா கிராமசபையின்அனுமதியை மீறியுள்ளதாகப் பதிலளித்தார். மின்சார என்ஜினியருக்கு இது சம்பந்தமாகக் கண்டனக் கடிதம் அனுப்பி வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேவை

புளியங்கூடல், வேலணை, சரவணை, நாரந்தனை, சுருவில் ஆகிய கிராமங்களில் வீடுகள் தோறும் சென்று **'ஈழநாடு' பத்திரிகை** விற்பனை செய்வதற்கு இளைஞர்கள் தேவை. பைசிக்கிள் வைத்திருப்பவர்கள் விரும்பத்தக்கது. நேரில் - வரவும். **விநியோக மனேஜர்,** ஈழநாடு, யாழ்ப்பாணம்.

1194

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1969-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 22-ம்திகதிஅச்சிட்டுவெளியிடப்பட்டது.

வரும் நினைவு கூறுதல் சாலச்சிறந்ததே.

சாரண இயக்கம். 1907ம் ஆண்டு சேரெரு பட்பேடன் பவல் என்னும் ஆங்கிலேய இராணுவத் தளபதியால் ஆபிரிக்காவில் முதன் முதல் ஆரம்பிகப்பட்டது. பிறருக்கு உதவி செய்ய ஆயத்தமாயிரு என்பதே சாரண இயக்கத்தின் மந்திரமாகும். நம்பிக்கை பணிவு, உதவி, சினேகிதம், மரியாதை, இரக்கம், கீழ்படிவு மகிழ்ச்சி' சிக்கனம் சுத்தம் என்ற பத்து நீதிகளின் அடிப்படையிலேயே இவ் வியக்கம் இயங்கிவருகின்றது.

''தெள்ளிய ஆலின்சிறு பழத்
தொருவிதை
தெண்ணீராக்கயலின் சிறுமீன்
சினையின்
நுண்ணியதே ஆயினும்
அன்னல் யானை
அணிதேர்ப் பெரும்படை
மன்னர்க்கிடுக்க
நிழலாகும்மே''

தானத்தை வளர்த்து, நாடுகளிடையே நல்லெண்ணத்தைப் பெருக்கி, யுத்தத்தை ஒழிக்கும் நோக்கங்களுடன் எழுந்த ஐக்கிய நாடுகள் சங்கமும் அரசியல் அடிப்படையிற்றான் ஒன்று சேர்ந்துள்ளன. ஆனால் அதே நோக்கங்கள் கொண்ட சாரணர்கள், சகோதர மனப்பான்மைச் சக்தியால் ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கிறார்களேயன்றி, அந்நாடுகள் போன்று அரசியல் மாயாவாதங்களால் கட்டுப்பட்டவர்களல்லர். இந்தக் குண விசேடங்கள்தான் சமாதானத்திற்கு விடிவெள்ளியாய் உலக சக்தி முழுவதும் பிரயோகிக்கப்படும் என்ற நம்பிக்கையொளியைக் கொடுக்கின்றது.

அரசாங்கம் இம்முயற்சியை மேற்கொண்டுள்ளது

சங்கத்தலைவர் திரு. இரத்தினசிங்கம், செயலாளர் திரு. கே, ஏ. இரத்தினம், திரு. கே. நடராசா திரு. ஏ. சண்முகம், திரு. கே. மாணிக்கவாசகர் ஆகியோர் தூதுகோஷ்டியில் இடம்பெற்றனர். (ந.நி.)

.....

அவல நிலை

யாழ்ப்பாணம், சனி

கிளிநொச்சியிலிருந்து காலை 9 மணி வரையும் பூநகரிக்கு பஸ் ஓடாததால் யாழ்ப்பாணத்திலிருந்தும், சாவகச்சேரியிலிருந்தும் புறப்படும் பிரயாணிகள், பூநகரி-சங்குப்பிட்டியிலிருந்து தினமும் நடந்து செல்ல வேண்டிய அவல நிலை ஏற்படுகின்றது.

இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து போக்குவரத்துக் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும்படி 41 பேர் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று வடபகுதி இ. போ. ச முகாமையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ந. நி)

யு. என். பி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையில் ஒற்றுமைப் பட்டதென்றும் எதிர்காலத்தில் இரு கட்சிகளுக்கிடையேயான தொடர்பு குறித்தும் விளக்கமாக பிரதமர் விளக்கவிடுப்பதாகவும் தெரியவருகிறது.

(8-ம்கலத் தொடர்ச்சி)

நீரானே தீயானே நெதி
யானே கதியானே
ஊரானே உலகானே உட
லானே உயிரானே
பேரானே பிறைசூடி பிணி
தீர்க்கும்பெருமானென்று
ஆராத ஐயாறர்க்காளாய்
நான் உய்ந்தேனே.

— அப்பர் சுவாமிகள்.

கல்வி அதிகாரி சீமான்பிள்ளை மறைவு

காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரியும் திடுமதி அக்னேசின் கணவரும், திரு. எட்வேட், திரு. எஸ். எம். பிள்ளை, திடுமதி எல். சி. சவரிமுத்து, கில்டா குமார், கிறேஸ் அன்ரனி என்பாரின் சகோதரரும், திடுமதி நீற்ரு இராசரத்தினம், லலிதா அலோசியஸ், ஜோர்ஜ், என்றி, எட்வேட், றிச்சேட் என்பவரின் பிரியதந்தையாருமான திரு. M. J. சீமான்பிள்ளை காலமானார். அடக்கம் மாதகலில் 22-ம் திகதி சனிக்கிழமை பி. ப. 4-30 மணிக்கு நடைபெறும். 1196

சிக்கு வந்தபோதும், இலங்கையில் சிலர் இவ்வித பூச்சாண்டியைக் கிளப்பிவிட்டனர் அவர் உடனே தெளிவான ஆணித்தரமான விளக்கமும் மறுப்பும் கொடுத்தார். இலங்கையிலுள்ள தி. மு. க. வுக்கும் தமக்கும் எவ்வித தொடர்புமில்லை என்றார். இலங்கை மீது தமது கட்சிக்கு எவ்வித ஆதிக்க நோக்கமுமில்லை என்பதை தெளிவாக்கி இந்நாட்டுடன் நட்பை பலப்படுத்த வேண்டுமென்பதே தம் ஆவல் என்று தெளிவுபடுத்தினர்.

இலங்கையிலுள்ள தி. மு. க. வுக்கும் தமிழக தி. மு. க. வுக்கும் ஏதும் தொடர்பு உண்டா? சந்தா ஏதும் செலுத்தப்படுகிறதா? அப்படி எதுவுமில்லை என்று இங்குள்ள தி. மு. க. தலைவர்களே அறிக்கைவெளியிட்டதாக ஞாபகம்.

ஆகவே இவ்விஷயத்தில் எவ்வித சந்தேகங்களுக்கும் தப்பெண்ணங்களுக்கும் இடமளிக்காதபடி, தெளிவான அறிக்கை வெளியிடுவது பல விதங்களிலும் நல்லதாகுமல்லவா?

ஐயாறன்.

குறிப்பு:-

பம்பாயிலே தமிழர்கள் சிவசேனை கலாட்டாவில் பெரும் கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகியும் தாங்கள் அதிக பொறுமை காட்டி, தமிழகத்திலுள்ள வடநாட்டினருக்கு எவ்வித தீங்கும் ஏற்படாமல் பார்த்துக் கொண்டு வருவதற்காகத் தங்களைப் பாராட்டுகிறேன்.

'ஐ'

0 0

அமரர் அண்ணா உணவில் சைவரா அல்லவா என்று கேட்டிடுந்தேனல்லவா! உரும்பராயிலிருந்து ஓர் அன்பர் எழுதியுள்ள கடிதத்தில் சரியான பதில் தந்துள்ளார். பிறவியில் அண்ணா அசைவம்தான். 13 வயதில் சைவ உணவு விரதமெடுத்து பரிசுகளும் பெற்றாராம். 15 வருட காலம் தொடர்ந்து சைவ உணவே சாப்பிட்டவர், ஒரு சமயம் பெரியார் ஈ. வே. ராவைப் பார்க்க ஹரித்துவாரத்துக்கு செல்லுகையில் வழியிலே பல்ஹர்ஷா ஸ்டேஷனில் சோறும், கறியும் கேட்டதற்கு, சோறும், இறைச்சிக் கறியும் கொண்டுந்தனர். பசியாக இருந்ததால் அதைச் சாப்பிட்டு, அதன் பிறகு உணவில் அசைவமாகவேஇருந்ததாக அவரே கூறுகிறார். திருக்குறளையும் திருவள்ளுவரையும் போற்றும் அவர் நெஞ்சம் இவ்விஷயத்தில் எப்படி இருக்கும் என்பதை விளக்கத் தேவையில்லை.

(7-ம்கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org